DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1536 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 12, 2025

## Canada based 'Tamil Rights Group's Statement to the 60th Session of the United Nations Human Rights Council

## ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையினது 60வது கூட்டத்தொடருக்காக கனடாவைத் தளமாகக் கொண்ட "தமிழ் உரிமைகள் குழு" தயாரித்துள்ள அறிக்கை

ஜெனிவாவில் விரைவில் கூடவுள்ள ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையினது 60வது கூட்டத்தொடருக்காக கனடாவைத் தளமாகக் கொண்ட "தமிழ் உரிமைகள் குழு" தயாரித்துள்ள அறிக்கையில் அதன் தலைவர் கனடா வாழ் நவரத்தினம் ஸ்ரீநாராயணதாஸ் அவர்கள் கையெழுத்திட்டுள்ளார். மேற்படி அறிக்கையில் பல முக்கிய விடயங்கள் மேற்படி மனித உரிமைகள் பேரவையின் கவனத்திற்கு எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

மேற்படி அறிக்கையில்"செம்மணி என்பது வெறும் அட்டூழியத்தின் தளம் மட்டுமல்ல அது இனப்படுகொலைக்கான ஒரு உயிருள்ள சான்று. ஆனாலும் அங்கு நீதிக்கான பாதை நிச்சயமற்றதாகவே உள்ளது. மனித உரிமைகள் கவுன்சில், அதன் தற்போதைய அணுகுமுறையில், உள்நாட்டு செயல்முறைகளை அதிகமாகச் சார்ந்திருப்பதன் காரணமாக மீண்டும் நீதி மறுக்கப்படும் வாய்ப்பு உள்ளதாகவே நாம் எண்ணுகின்றோம்." என்று அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

## கனடா — ரிச்மண்ட் ஹில் நகரில் குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் வாகனம் வேகமாக மோதியதில் ஒன்றரை வயதுக் குழந்தை மரணத்தை தழுவியது!

### மேலும் வெவ்வேறு வயதுகளை உடைய 6 குழந்தைகள் படுகாயம்! வாகனத்தைச் செலுத்திய 70வயதுடைய ஆண் ஒருவர் கைது!




கனடாவில் ரொறன்ரோ பெரும்பாகத்தின் எல்லையில் அமைந்துள்ள ரிச்மண்டஹில் நகரில் 10ம் திகதி புதன்கிழமை மதியம் குழந்தைகள் பராமரிப்பு மையத்தின் நிலத்தை தொட்டு நின்ற கண்ணாடி ஜன்னல் வழியாக வாகனம் பாய்ந்து சென்றதில் ஒன்றரை வயது குழந்தை இறந்துள்ளது, மேலும் ஆறு குழந்தைகள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

6வது அனைத்துலக திருக்குறள் மாநாடு
INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE
19 20 21 SEPTEMBER 2025
in TORONTO, CANADA
for more information +1 (416) 707.9104

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


13 SEPT 2025
6:30 PM
D-MEDIA
THE T GROUP REAL ESTATE
RE/MAX
THANESH SIVAGANASUNDARAM
Realtor
647-505-9207
வழங்கும்
என்றென்றும்
SPB
TICKETS $30
JUST MELODIES, MEMORIES, AND THE MAGIC OF SPB SIR - UNPLUGGED!
TAMIL ISAI KALAMANDRAM OF ONTARIO
1120 TAPSCOTT RD UNIT 3, SCARBOROUGH, ON M1X 1E8
REFRESHMENTS WILL BE SERVED
FOR TICKETS & SPONSORSHIPS
BAVAN : 647-702-7403
New Rangana's Jewellery
Cash for Gold
647 702 2159
Mr Man Maintenance
Pro Carpet Cleaning & Truck Mount Services
416 999 4842
Dr. Sabesan Thangathurai
Dental Surgeon
Tel: 416-666-7770
குணம்ஸ் Super Market
Tel: 416 289 9996
1145 Morningside Ave #32,33 Toronto, Ontario M1B0A7
NEW PREMIUM STONE LTD
Quartz, Granite, Countertop
416.858.1290
100 Melford Dr, Unit #1, Scarborough, ON. M1B 2G4
SAI Autism Learning Centre
647 444 4033
Canadian Women Council
Individual Tax Filing
Business Tax Filing
Unincorporated and Incorporated TAXES
Tax Deductions Review
State & Federal Tax Filing
Thanam Kanagaratnam
Tax Analyst
416 (298-6718)
Banquet Hall
Vassant
Deepa
+94 776 070 196
VS BEACHSIDE RESORT
Negombo
Sri Lanka
HELPING HANDS
SENIOR CARE
VILLA KARUNA
இரமணீலய நுண்கலைக்கூடம்
RAMANEELAYA ACADEMY OF FINE ARTS
SIVA MASTER TUTORING
416 569 1229
உதயன்
UTHAYAN
tamil one TV HD
Reflection of Canadian Tamils
Life100
INSURANCE & INVESTMENTS INC.
SINCE 2005
Vision mobile
416.844.1111
3341 MARKHAM ROAD UNIT - 119 SCARBOROUGH, ON M1X-0A5
APPLE GREEN WASH
Sakthi Soma
Truck & Trailer Wash
Vehicle Interior Detailing
Sticker Removal
(416) 456-4274
(647) 781-9954
BEHIND ME
ARE YOU LOOKING
SECURITY GUARD
WHY CHOOSE US?
647-656-6977
647-472-2222
gtaoneinc@gmail.com
NORTH STYLEZ
Look Fabulous With Our Lehenga Collections
416-565-8585
northstylezmc

Canada — We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 — Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## றொறன்ரோ கத்தோலிக்க மக்களின் வருடாந்த பெருவிழா

றொறன்ரோ தமிழ் கத்தோலிக்க மக்களின் வருடாந்த பெருவிழா, எதிர்வரும் செப்ரம்பர் 14ம் திகதி, நடைபெறவுள்ளது. புதுமைகளின் தாயான புனித வேளாங்கன்னி அன்னை என அறியப்பட்ட, தூய ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா, இவ்வருடமும் வழமைபோன்று மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஸ்காபரோவில், பேர்ச்மவுண்ட் மற்றும் டன்போர்த் அவனியூ வீதிகள் சந்திக்கும் இடத்தில், இலக்கம் 131 பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில், மாலை 3:30 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும். திருப்பலியைத் தொடர்ந்து, ஆலயத்திற்கு வெளியே திருச்சுரூபப் பவனி மற்றும் அன்னையின் ஆசீர்வாதம் இடம்பெறும். அனைத்து பக்தர்களையும் கலந்துகொண்டு அன்னையின் ஆசிபெற அழைக்கிறோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்: 416-264-6544

(முன்பக்கத் தொடர்ச்சி)

## கனடா— ரிச்மண்ட் ஹில் நகரில் குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் வாகனம் வேகமாக மோதியதில் ஒன்றரை வயதுக் குழந்தை மரணத்தை தழுவியது!

யங் தெரு மற்றும் நாட்டிங்ஹாம் தெரு ஆகியவை சந்திக்கும் சந்தியில் அமைந்துள்ள மேற்படி குழந்தை பராமரிப்பு நிலையத்தில் மேற்படி துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்த சம்பவத்தில் ஒன்று முதல் மூன்று வயது வரையிலான ஏழு குழந்தைகளும், மூன்று வயதில் மூத்தவர்களான ஊழியர்களும் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். ஒன்றரை வயது குழந்தை இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது, இரண்டாவது குழந்தையின் நிலை கவலைக்கிடமாக உள்ளது, மீதமுள்ளவர்கள் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றுயோர்க் பிராந்திய பொலிசார் தெரிவித்துள்ளனர்.
மேற்படி துர்ப்பாக்கிய சம்பவம் தொடர்பாக ஒன்ராறியோவின் கல்வி அமைச்சரும் மார்க்கம்-ஸ்டௌஃப்வில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான போல் கலண்ட்ரா, அவர்கள் தனது துயரத்தைப் பகிர்ந்த கொண்டார். சமூக ஊடகங்களில் ஒரு பதிவில், "இந்த துயரமான சம்பவத்தால்அப்பகுதி மக்கள் ஆழ்ந்த கவலை" அடைந்ததாகக் கூறினார்.

## உதயன் கதிரோட்டம்

## செம்மணியை அகழ்வை தன் பணி போன்று தலையில் சுமந்து நின்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்கள் பதவி உயர்வுடன் செல்வது அந்தப் பணிக்கு வலுச் சேர்க்குமா அல்லது வாய் மூடவைக்குமா?

இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாகக் தற்போது இலங்கை அரசாலும் தமிழ் மக்களாலும் அதற்கப்பால் புலம் பெயர் சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதாகக் கருதப்படும் இடத்தை அழ்வாய்வு செய்யும் பணிகளை ஆரம்பத்தில் இருந்தே தன் தலையில் சுமந்து நின்றவரும்
புகைகுழி அகழ்வு என்னும் பணியை ஒரு அரச பணியாக மாற்றி தெற்கிலிருந்து எவ்வித இடையூறுகளும் அற்ற வகையில் நகர்த்திச் சென்றவருமான நீதிபதி .ஏ. ஆனந்தராஜா அவர்களின் நிதானமானதும் நேர்மையானதுமான பணிகளை உலகத் தமிழர் பாராட்டிக் கொண்டிருந்த தருணத்தில் அவருக்கு வழங்கப்பெற்றிருக்கும் பதவி உயர்வு செம்மணி என்னும் முக்கிய பகுதியான விளங்கிய அந்த பிரதேசத்தின் அவசியத்தை அல்லது அங்கு இடம்பெறும் பணிகளை "குறைப்பு" நடவடிக்கைகளுக்கு உள்ளாக்குமா என்னும் சந்தேகம் சாதாரண மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்
உறுப்பினர்களுக்கும் எழுந்துள்ளதை மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையொன்றின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.
செம்மணி என்று எலுமபுக் கூடுகளையும் அதற்கு உரித்தானவர்களின் ஏனைய எச்சங்களையும் தொடர்ச்சியாக வெளியுலகிற்கு தினமும் காட்டும் ஒரு தளமாக விளங்கும் அந்த இடத்தை குற்றச் சம்பவம் இடம்பெற்ற பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுத்தவரும் தலைமேற் சுமந்து நின்ற நீதிவான் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்களே ஆவார்.
அவரது பதவி உயர்வு அறிவிப்பு வந்த பின்னர் மேற்படி செம்மணி அகழ்வுப் பணிகளை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் என்றும் அவரது மேற்பார்வையில் அகழ்வாய்வுகள் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருக்கின்ற விடயமானது பொதுமக்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு சற்று ஆறுதலைத் தந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு செப்டெம்பர் 3ம் திகதி உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கொழும்பு சென்றவுடன் 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கயதை நாடே உற்று நோக்கியது அவர்களில் , முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட கோட்டை நீதிபதி நிலுபுலி லங்காபுர மற்றும் செம்மணி விவகாரங்களை இதய சுத்தியோடு மேற்கொண்ட யாழ்ப்பாண நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்கியிருந்தன.
தற்போது செம்மணி அகழ்வாய்வை விசாரிக்கும் தற்போதைய கற்றறிந்த நீதவான் பதவி உயர்வு பெற்றால், தற்போதைய விசாரணை தொடர்பாக அவருக்குப் பின்னர் விசாரணைகளை முன்னெடுக்கும் நீதவானுக்கு தேவையான அனைத்து உதவிகளும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென, ஜனாதிபதி இந்த நியமனங்களை வழங்குவதற்கு முன்னதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட செம்மணிப் புதைகுழி குறித்த தனது முதல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
இவ்வாறாக. இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் 3ம் திகதி புதன்கிழமை
வரையிவரையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித
புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 231 ஆக உயர்வடைந்துள்ளது என்ற செய்தியும் அனைவரையும் கலக்கமடையச் செய்துள்ளது.

முன்னாள் நீதவானால் குற்றம் நடந்த இடமாக அறிவிக்கப்பட்டுள்ள புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள், நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கு உள்ளானவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பொது அதிகாரிகள் மற்றும் தங்கள் உறவுகளை இழந்ததனால் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களை துன்புறுத்துவதைத் தவிர்க்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிக்கு உத்தரவிடுமாறுஅன்றைய தினம் (செப்டெம்பர் 03) வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மாஅதிபருக்கு பரிந்துரைத்துள்ளது. என்ற விடயத்தை நாம் உற்று நோக்குமிடத்து இலங்கையில் இயங்கும் மனித உரிமைக் குழு தன் பணியை சீராகச் செய்கின்றது என்பதைக் காட்டுகின்றது
செம்மணி மனிதப் புதைகுழி விசாரணையில் இலங்கை பொலிஸாரும், இலங்கை இராணுவமும் "இணைந்த தரப்பினராக" அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13 பக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
விசாரணைகளை நடத்தும்போது (அதாவது, ஒரு நபர் வாக்குமூலம் அளிக்க ஏன் அழைக்கப்படுகிறார் என்பதை தெளிவாகத் தெரிவிப்பதற்காக) ஜூலை 2, 2025 திகதியிடப்பட்ட பொலிஸ்மா அதிபரின் சுவுஆ 101.ஃ.ஊசுவுஆ 61 இலக்க சுற்றறிக்கைக்கு அமைய செயல்படுமாறும், குறித்த தவறுகள் தொடர்பிலான தெளிவான சந்தேகம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர, செம்மணி
புதைகுழி விசாரணை குறித்து செய்தி வெளியிடும் ஊடவியலாளர்களை அழைத்து புலனாய்வு அதிகாரங்களை துஂபிரயோகம் செய்வதைத் தவிர்க்குமாறு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரைணைப் பிரிவுக்கு (ஊவுஐனு) அறிவுறுத்தல்களை வழங்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் ஒருமுறை பொலிஸ் தலைவருக்கு நினைவூட்டியுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் குவியலாக 08 என்புக்கூட்டு தொகுதிகள் இன்றைய தினம்(04) அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் புதைகுழியினுள் பிறிதொரு பகுதியில் இரண்டு என்புக்கூடுகள் சிக்கலான முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
அதேவேளை புதைகுழியின் மற்றுமொரு இடத்தில் 3ம் திகதி புதன்கிழமை இரண்டு என்புக்கூடுகளுக்கு மேலாக ஒரு என்புக்கூடும் , ஒரு எலும்புக்கூட்டின் தோள்பட்டை பகுதியுடன் தொடுகையுற்றவாறு மற்றுமொரு என்புக்கூடும் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவை 4ம் திகதி அன்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பதெல்லாம் ஒரு விசித்திரமான தகவல்களாகவும் அதே வேளை உள்ளங்களை அதிரவைத்து மேலும் மேலும் அதிர்ச்சி தரும் எதிர்பார்ப்புக்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கக் கூடியவையாக இருப்பதும் உண்மையே
கடந்த 2ஆம் திகதி ஒரு எலும்புக்கூட்டு தொகுதியின் தோள்பட்டையுடன் தொடுகையுற்ற நிலையில் மற்றுமொரு என்புக்கூட்டு தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் , 29ஆம் திகதி ஒரு எலும்புக் கூட்டு தொகுதியின் மார்பு பகுதியில் ஒப்பீட்டளவில் சிறிய எலும்பு கூடொன்றின் மண்டையோட்டு பகுதி காணப்பட்டவாறு இரு எலும்பு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை செம்மணி என்னும் இடத்தில் எவ்வாறு எமது மக்கள் பழிவாங்கப்பட்டு புதைக்கபட்டார்கள் என்பதும் வெளிச்சமாக தெரிகின்றன
இவ்வாறான் மனித புதைகுழிகள் எங்கே உள்ளது என பார்த்தால் இராணுவத்தின் மண் அணை செல்கின்ற காவலரண்களுக்கு அருகிலும் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மற்றும் சோதனைச்சாவடிகள், சதுப்பு நிலங்களிலும் காணப்படுகின்றன. எனவே முழு அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிபதி இந்தப் பணிக்கு தொடர்ச்சியாக மேற்பார்வையிடும் அதிகாரத்தைக் கொண்டவராக விளங்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளாக இருப்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் நடத்தப்பெற்ற இந்திய கலைஞர்களின் வள்ளிக் கும்மி நடனம்!





தமிழகத்தில் இருந்து வருகை தந்த கலைஞர்களின் வள்ளிக்கும்மி நடனமானது 4ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் நல்லூர் சிவகுருணத்தில் ஆற்றப்பெற்றது.

தமிழகத்திலிருந்து காங்கேசன்துறை ஊடாக 150க்கும் அதிகமானோர் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். இவ்வாறு வருகை தந்தவர்களில் 65 கலைஞர்கள் இந்த வள்ளி கும்மி நடனத்தை ஆற்றினார்கள்.

இரு நாடுகளுக்கு இடையிலான இன நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கிலும் தென்னிந்தியாவின் பாரம்பரிய கலையை ஈழத்து மக்களிடமும் கொண்டு சென்று சேர்க்கும் முகமாகவும் இந்த பள்ளிக்கு நடனம் ஆற்றப்பட்டது.

சிவகுரு ஆதீனத்தினத்தினர், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் பல நூற்றுக்கணக்கான ரசிகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பாக இந்திய குழுவினருடனான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 8ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் பி.ப 03.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இந்திய துணைத் தூதரக உதவித் தூதுவர் திரு. சங்கரன் இராஜகோபாலன், தூதரக அதிகாரிகளான திரு. என். ரவிசங்கர், திரு. எம்.பி. பெலியப்பா உள்ளிட்டவர்கள் பங்குபற்றினார்கள்.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் அவர்களினால் துறைமுக அபிவிருத்தியின் அவசியம், தேவைப்பாடுகள் அதனால் ஏற்படும் சாதகங்கள், மீனவர்களுக்கான நன்மைகள், தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்கமளித்து, அபிவிருத்தி தொடர்பாக இந்தியத் தூதரக அதிகரிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்தரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர், பருத்தித்துறை பிரதேச செயலாளர், கரையோரம் பேணல் மற்றும் மூலவள முகாமைத் திணைக்கள பொறியியலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக முகாமையாளர் ஆகியோர் பங்குபற்றினார்கள்.





# மன்னாரில் மக்கள் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வீதிகளில் உலர விடப்பட்ட மீன் பிடி வலைகளை அப்புறப்படுத்தும் மன்னார் நகர சபை



10.09.2025

மன்னார் நகர சபை எல்லைக்குள் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதிகளிலும் பொது இடங்களிலும் உலர வைக்கப்பட்ட மீன்பிடி வலைகளை அன்றைய தினம் புதன்கிழமை (10) மன்னார் நகரசபை ஊழியர்கள் அப்புறப்படுத்தி கையகப் படுத்தியுள்ளனர்.

நீண்ட காலங்களாக மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சில மீனவர்கள் ஆபத்தான முறையில் பிரதான வீதிகளிலும் உள்ளக வீதிகளிலும் வலைகளை உலர விடுவதால் துர்நாற்றம் உட்பட விபத்துக்கள் ஏற்பட்டு வந்த நிலையில் அன்றைய தினம் (10) நகரசபை ஊழியர்களினால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக கிடைக்க பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய முதல் கட்டமாக புதன்கிழமை ஜிம்றோன் நகர் மற்றும் எமில் நகர் பகுதிகளில் உள்ள வீதிகளில் உலர விடப்பட்டிருந்த வலைகள் நகர சபையினால் அப்புறப்படுத்தப்பட்டு கையகப்படுத்தப் பட்டுள்ளது.

அதே நேரம் மன்னார் நகர சபை எல்லைக்குள் உள்ள பிற பகுதிகளில் தொடர்ச்சியாக போக்குவரத்துக்கும் மக்களின் நடமாட்டத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் வலைகள் உலரவிடும் மீனவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதுடன் வலைகளும் கையகப்படுத்தப்படவுள்ளது.



பெருந்தன்மையுடன் நிதியாதாரம் அளிப்பவர்கள் CN alectra

செப்டம்பர் மாதம்
பிராம்ப்டன் நகர
மரங்களுக்கான மாதம் ஆகும்

brampton.ca/trees
@BramptonParksRec

கீழ்கண்டவாறு கொண்டாட எங்களுடன் இணையுங்கள்:
- மரம் நடும் முனைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி அறிதல்
- கால அட்டவணையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளில் பங்கெடுத்தல்
- குடியிருப்பகங்களில் நடுவதற்கான இலவச மரக்கன்றுகள் பெறுவதில் பங்கெடுத்தல்

BRAMPTON

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் சிவப்பு நிற தலைப்பட்டியுடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

## நாளுக்கு நாள் வலுக்கும் காற்றாலைக்கு எதிரான போராட்டம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (05.09.2025)



மன்னார் தீவில் காற்றாலை அமைக்கப்படவுள்ள பகுதிகளை சேர்ந்த மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கான ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட எரிசக்தி அமைச்சர் தலைமையிலான குழு மன்னார் மாவட்டத்திற்கு 5ம் திகதி அன்றைய தினம் வெள்ளிக்கிழமை வருகை தந்துள்ள நிலையில் மன்னார் மாவட்ட மக்கள் 35 ஆவது நாளாகவும் தொடர் போராட்டத்தில் மன்னார் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அன்றைய தினம் வெள்ளிக்கிழமை (5) மன்னார் பிரதான சுற்று வட்ட பகுதியில் ஒன்று திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் காற்றாலை, கணிய மணல் போன்ற அழிவு திட்டங்கள் மன்னார் மாவட்டத்தில் இனியும் வேண்டாம் என்று ஒருமித்த குரலுடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அன்றைய தினம் போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் மன்னார் யோசேவாஸ் கிராமத்தை சேர்ந்த மக்களும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் சிவப்பு நிற தலைப்பட்டிகளை அணிந்து, பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் மக்களின் விருப்பத்திற்கு மாறாக திணிக்கப்படும் குறித்த செயல் திட்டங்களுக்கு எதிராக தமது அதிருப்தியை வெளிப்படுத்தி யிருந்தனர்.

அதே நேரம் வெள்ளிக்கிழமை (5ம் திகதி) மன்னார் மாவட்ட மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக வவுனியா வேப்பங்குளம் கிராம மக்களும் அவர்களுடன் வெப்பங்குளம் பங்குதந்தை, அருட்சகோதிரிகள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது,



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அட்டை பண்ணை தொடர்பில் சர்ச்சையான கருத்து – ஊழலில் ஈடுபடுகின்றாரா இலங்கையின் கடற்றொழில் அமைச்சர்?

## வடக்கு மக்களின் உணவு தட்டில் அடங்காத கடல் அட்டையை ஊக்குவிக்கும் முகமாக அமைச்சர் சந்திரசேகரன் செயற்படுவது ஏன்?



கடல் அட்டைப் பண்ணை எல்லோருக்கும் வழங்குவோம் பயப்பட வேண்டாம் என கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், நீங்கள் ஒன்றரை ஏக்கர் பண்ணை வைத்திருந்தால் அரை ஏக்கருக்கு அரசுங்கத்திற்கு பணம் கட்டினால் போதும் என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் கடல் அட்டைப் பண்ணையாளர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு கருத்து தெரிவித்த காணொளி வெளிவந்த நிலையில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆட்சி காலங்களில் கடல் அட்டை பண்ணைகளுக்கு எதிராக சந்திரசேகரன் கருத்து தெரிவித்து வந்தார்.

தற்போது அமைச்சராக உள்ள நிலையில் சட்ட விரோதமாக கடல் அட்டை பண்ணைகளை மேற்கொண்டு வருகின்றவர்களை பாதுகாக்கும் பொருட்டும் அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்தமையை காண முடிகிறது.

கடந்த காலங்களில் சீனர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் கடல் அட்டை குஞ்சு பொரிக்கும் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அது பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

குறிப்பாக வடக்கு மக்களின் உணவு தட்டில் அடங்காத கடல் அட்டையை ஊக்குவிக்கும் முகமாக அமைச்சர் சந்திரசேகரன் செயற்படுவது சீனாவின் தூண்டுதலாக இருக்குமோ என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் ஆழம் குறைந்த யாழ்குடா கடற் பரப்பில் பாரம்பரிய மீன் பிடியை நம்பி பல மீனவ மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் கடல் அட்ட பண்ணைகளை மீள ஏக்கர் கணக்கில் வழங்க முற்படுவது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து பல் தேசிய கம்பனிகளை ஊக்குவிக்கும் செயற்பாடா என கேள்வி எழுப்புகின்றனர்.

# கிருஷாந்திக்கும் செம்மணிக்கும் சர்வதேச விசாரணையே நீதியை பெற்றுத் தரும்!

இதுவரையில் 240 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள, இலங்கையின் இரண்டாவது பெரிய மனித புதைகுழியான செம்மணி புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை நடத்தாமல், பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி உட்பட கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் போவது இல்லையென, வடக்கின் தமிழ் பிரதிநிதி ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

“கிருஷாந்தி குமாரசாமி இந்த இடத்தில் நிலைக்கொண்டிருந்த சந்திரிக்கா அரசாங்கத்தினுடைய ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளால் வழி மறிக்கப்பட்டு மிகக் கொடூரமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரை தேடிச் சென்ற உறவினர்கள், இங்கு புதைக்கப்பட்டவர்கள் என ஒட்டுமொத்தமாக தமிழ் தேசத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு எந்த நீதியும் இல்லாத நிலையில் இந்த நினைவேந்தலை நடத்துகின்றோம். இந்த சித்துப்பாத்தியில் 240 வரையான எலும்புக்கூடுகள் வெளிவந்துள்ளன. இது எதனை காட்டுகிறதென்றால், மாபெரும் இனப்படுகொலைக்கான சான்றுதான் இது. இந்த சான்றுகளை வைத்துக்கொண்டு ஒரு சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே இந்த படுகொலைகளுக்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும்.”

29 வருடங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தால் பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்யப்பட்ட மாணவியை நினைவுகூரும் வகையில் யாழ்ப்பாணத்தின் செம்மணியில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளருமான செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு கூறினார்.

செப்டெம்பர் 7ஆம் திகதி வடக்கு, கிழக்கு நினைவேந்தல் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த நினைவேந்தல் நிகழ்வில் கிருஷாந்தி குமாரசாமியின் உறவினர் ஒருவர், சிவில் சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் “வாசலிலே கிருஷாந்தி” என்ற செம்மணி பற்றிய கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டது.

முன்னாள் நீதவானால் குற்றப்பிரதேசமான அறிவிக்கப்பட்ட புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள், நீதிக்கு புறம்பான கொலைகளுக்கு ஆளானவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்புகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13 பக்க அறிக்கையில், செம்மணி புதைகுழி விசாரணையில் இலங்கை பொலிஸார் மற்றும் இலங்கை இராணுவம் “இணைந்த தரப்பினராக” அடையாளம் காணப்பட்டுள்ளது.

### கிருஷாந்தி குமாரசாமி

சுண்டிக்குளி மகாவித்தியாலய மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, 1996ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, செம்மணி சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டு, கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து, கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்.

அவரது தாமதத்தால் பதற்றமடைந்த அவரது தாயார் ராசம்மா குமாரசாமி மற்றும் சகோதரர் பிரணவன் குமாரசாமி குடும்ப நண்பரான சிதம்பரம் கிருபாமூர்த்தியுடன் செம்மணி சோதனைச் சாவடிக்குச் சென்று விசாரித்தனர்.

கிருஷாந்தி பற்றிய எந்தத் தகவலும் தமக்குத் தெரியாது எனக் கூறிய சோதனைச் சாவடியின் படையினர், மூவரையும் ஒரு பதுங்குக் குழிக்குள் அழைத்துச் சென்று வலுக்கட்டாயமாகத் தடுத்து வைத்திருந்தனர். அன்று இரவு இராணுவத்தினர் பிரணவன், கிருபாமூர்த்தி ஆகியோரை கயிற்றால் கழுத்தை நெரித்து, இருவரின் உடல்களையும் பாதுகாப்புச் சாவடிக்குப் பின்னால் புதைத்தனர். அவர்களின் ஆடைகளை தனியாக புதைத்தனர். ராசம்மாவையும் அதே வழியில் கொலை செய்த இராணுவத்தினர், உடலை சோதனைச் சாவடிக்குப் பின்னால் புதைத்தனர்.



கிருஷாந்தி குமாரசாமி கூட்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொல்லப் பட்டதாக அரசாங்கப் படைகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்குமாறு அப்போதைய சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தது.



அதன் பின்னர், நான்கு பொதுமக்கள் காணாமல் போனமை தொடர்பில் இராணுவ அதிகாரிகளுக்கு கிடைத்த அநாமதேய மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து, செம்மணி இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதற்கமைய செம்மணி இராணுவ சோதனை சாவடி அருகே புதைக்கப்பட்ட நிலையில் நான்கு அழுகிய உடல்கள் மற்றும் ஆடைகள் கண்டெடுக்கப்பட்டன.

9 இராணுவ சிப்பாய்கள் மீது 18 குற்றச்சாட்டுகளுடன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பின்னர், உயர்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட குழு வழக்கை விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலம் மற்றும் பிற வாய்மொழி ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கியது.

இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் அடையாளம் காணப்பட்ட 5 இராணுவ உறுப்பினர்களான ராஜபக்ச தேவகே சோமரத்ன ராஜபக்ச, ஜே.எம். ஜயசிங்க, ஜி.பி.பிரியதர்ஷன மற்றும் ஏ.எஸ்.பிரியஷாந்த பெரேரா ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட மற்ற மூன்று இராணுவ உறுப்பினர்களுக்கு இருபத்தைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 4 இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய மற்றும் சட்டத்தரணி ரஞ்சித் பெர்னாண்டோ மற்றும் பல சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்த போதிலும், அதனை ஆராய்ந்த அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான ஐவர் அடங்கிய அமர்வு மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என தீர்மானித்தார்.

### செம்மணி மனித புதைகுழி

கிரிஷாந்தி குமாரசுவாமி புதைக்கப்பட்ட பிரதேசத்தில் மேலும் நானூறு முதல் ஐந்நூறு சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனித புதைகுழி தோண்டப்பட்ட நேரத்தில், ஐந்து பேர் கொண்ட குழு 15 பாதுகாப்புப் படையினரை பொறுப்புக்கூறியதோடு நான்கு இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை. மாறாக 2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்டமா அதிபர் அலுவலகத்தில் இருந்த அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி மொஹான் பீரிஸின் ஏற்பாட்டில் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் நான்கு பேரும் பதவி உயர்வு பெற்றனர். பின்னர் சட்டமா அதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி பீரிஸ், இலங்கைக்கு எதிராக மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட, யுத்த காலத்தில் அரசாங்கத்தின் பிரதான சட்ட ஆலோசகராக இருந்தார். 2013 ஆம் ஆண்டு பிரதம நீதியரசர் பதவியில் இருந்து சர்ச்சைக்குரிய வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு பதிலாக மொஹான் பீரிஸை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியமித்தார். இன்று அவர் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக செயற்படுகின்றார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் 3ஆவது கட்டத்தை ஆரம்பித்து வைக்க யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, செப்டெம்பர் 1, 2025 அன்று, செம்மணி மனித புதைகுழி குறித்து முறையான விசாரணை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

“செம்மணி மனித புதைகுழி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அது குறித்து முறையான விசாரணையை ஆரம்பித்துள்ளோம் எங்களிடம் மறைக்க எதுவுமில்லை.”

மறுதினமே, ஜனாதிபதி, யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு செல்லும் வழியில் செம்மணி மனித புதைகுழியை ஆய்வு செய்யாமலேயே கடந்து செல்வதை ஊடகவியலாளர்கள் காணொளி பதிவு செய்திருந்தனர்.

# யாழ்ப்பாணத்தில் சகோதரனின் வீட்டில் கூரை வேலை செய்தவர் கீழே விழுந்து உயிரிழப்பு!

யாழில் சகோதரனின் வீட்டு கூரை வேலை செய்தவர் ஒருவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். மானிப்பாயைச் சேர்ந்த சிவநாயகம் சுவீஸ் (வயது 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவர் கடந்த 3ஆம் திகதி சகோதரனின் வீட்டு கூரை வேலை செய்வதற்கு சென்றுள்ளார். அங்கு கூரை வேலையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தவேளை கூரை மரம் முறிந்து கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி 8ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# யாழ்ப்பாணத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பொன்னாலைக் கிராமத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவன்!

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சைக்கீ தோற்றி மாணவன் ஒருவர் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று பாடசாலை சமூகத்துக்கும், பெற்றோருக்கும், தனது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அரங்கநாதன் தத்வார்த்தன் என்ற மாணவனே இவ்வாறு 141 புள்ளிகளை பெற்றுள்ளார். குறித்த கிராமமானது பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களை கொண்ட கிராமமாக காணப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் குறித்த மாணவன் சிறந்த பெறுபேற்றை அந்த கிராமத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் 5 வருடங்களின் பின்னர் குறித்த மாணவன் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேற்றை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மகாகவி பாரதியாரின் 104வது ஆண்டு நினைவேந்தல்!

மகாகவி பாரதியாரின் 104வது ஆண்டு நினைவு தினம் 11ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இதன்போது பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

11 டிசம்பர் 1882ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் சின்னசாமி ஐயருக்கும், இலக்குமி அம்மாளுக்கும் மகனாக பிறந்த பாரதியார் கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதியாக பணிபுரிந்துள்ளார்.

அவர் தினமும் உணவளிக்கும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையால் தாக்கப்பட்ட பிறகு உடல் நலம் குன்றிய நிலையில் சில மாதங்களுக்குப் பிறகு 1921 செப்டம்பர் 11 அன்று அதிகாலை இறையடி சேர்ந்தார்.

அவரின் படைப்புகள் இன்றுவரை பேசப்படும் ஒன்றாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4


Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# கிரிஷாந்தி; செம்மணி; ஜெனிவா

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**





இலங்கைத் தீவு தேரவாத பௌத்தத்தின் சேமிப்பிடம் என்று கருதப்படுகிறது. இச்சிறு தீவில் பரவலாக புத்தர் சிலைகளை வெவ்வேறு நிலைகளில் காணலாம். இருக்கின்ற, நிற்கின்ற, நிஸ்டையில் இருக்கின்ற, உறங்குகின்ற புத்தர் சிலைகள். இவ்வாறு நிஸ்டையில் இருக்கின்ற புத்தருடைய சிலைகளை வழிபடும் ஒரு நாட்டில் நிஸ்டையில் இருப்பது போன்ற தோற்றத்தைக் கொண்ட ஒரு எலும்புக்கூடு அண்மையில் செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்டது.

அந்த எலும்பு கூட்டோடு காணப்பட்ட ஏனைய எலும்புக்கூடுகளில் இருந்து அதன் தலை சற்று தூக்கலாக மேலே தெரிந்தது என்றும் அதன் வாய் வழமைக்கு மாறாக கெழித்துப் போய் காணப்பட்டது என்றும் ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். அந்த எலும்புக்கூடு நிஸ்டையில் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை தருவதனால் அதற்கு ஏதும் மத அல்லது ஆன்மீகப் பரிமாணம் இருக்கக்கூடுமா என்று சட்ட மருத்துவ அதிகாரி சந்தேகித்த காரணத்தால், யாழ்.பல்கலைக் கழகத்தின் இந்து நாகரிக துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் செம்மணிக்கு அழைக்கப்பட்டார்கள். அந்த எலும்பு கூட்டுக்கு ஆன்மீகப் பரிமாணம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடம் என்று கூறிக் கொள்ளும் ஒரு நாட்டில் ஒரு புதை குழிக்குள் அப்படி ஒரு எலும்புக்கூடு. இச்சிறிய தீவை ஆட்சி செய்த சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் மெய்யாகவே புத்த பகவானின் உபதேசங்களை பின்பற்றி நடந்திருந்தால் அப்படி எலும்புக் கூட்டை வைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டி வந்திருக்காது.

அந்த எலும்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்ட கொஞ்ச நாட்களுக்குப் பின், செம்மணிப் புதை குழியிலிருந்து நடந்து போகும் தூரத்தில், செம்மணி வளைவில், கடந்த ஏழாந் திகதி கிருசாந்தி நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கே செம்மணி தொடர்பாக வெளிவந்த கவிதைக-ளின் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் கிருசாந்தியோடு கொன்று புதைக்கப்பட்ட அவருடைய சகோதரர் பிரணவனின் நண்பர் ஒருவர் உரையாற்றினார். அவர் கிருசாந்தியின் தாயாருடைய இளைய சகோதரியின் மகளுடைய கணவர் ஆகும். கொல்லப்பட்ட பிரணவனின் வயதுக்காரராகிய அவர் தனது உரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கிருசாந்தியின் மூத்த சகோதரி இப்பொழுது புலம் பெயர்ந்து வாழ்கிறார். தனது குடும்பத்தவர்கள் சம்பந்தப்பட்ட நினைவு நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு அவர் தயாரில்லை என்று கூறப்படுகிறது. 29 ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்துக்கு நடந்த கொடுமையை இரைமீட்டக் கூடிய நிகழ்வுகளில் கலந்து கொள்வதை அவர் விரும்பவில்லையாம். ஊருக்கு வந்து தாங்கள் வாழ்ந்த வீட்டைப் பார்ப்பதற்கோ தன் குடும்பத்துக்கு நடந்த கொடுமை தொடர்பாக யாரோடும் உரையாடுவதற்கோ அவர் தயாரில்லை என்றும் அங்கே கூறப்பட்டது. 29 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொடுமையை நினைவு கூர்வதன் மூலம் அவர் தன் மன நிம்மதியை இழக்கலாம் என்று அஞ்சுவதாகவும் அவர் அந்த கொடுமையான நினைவுகளில் இருந்து இன்னும் விடுபடாதவராகக் காணப்படுவதாகவும் இது தான் வாழ்வதற்குப் பாதுகாப்பான ஒரு தீவு அல்ல என்று கருதி அவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், மீண்டும் இந்த நாட்டுக்குள் வர அவர் விரும்பவில்லையென்றும் அவருடைய உறவினர் செம்மணி வளைவில் உரையாற்றும் போது கூறினார்.

கிருசாந்தி கொல்லப்பட்டு 29 ஆண்டுகளின் பின் அவருடைய சகோதரியின் மனோநிலை அவ்வாறு காணப்படுகிறது. கிரிசாந்தியின் நினைவு நாளுக்கு அடுத்த நாள் அதாவது எட்டாம் திகதி ஜெனிவாவில் ஐநா மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத்தொடர் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இந்த 60வது கூட்டத்தொடர் இலங்கைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கும் என்று இலங்கையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரான சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா கூறியுள்ளார்.

அண்மையில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அதன்பின் அவர் வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பதில் பின்வருமாறு அமைகிறது.

“வெளிப்புற தலையீடுகள், தேசிய ரீதியான முயற்சிகளைத் தடுக்கவும் மக்களை துருவப்படுத்தவும் மட்டுமே உதவும் என்று இலங்கை அவதானித்துள்ளது. எனவே, சர்வதேச நடவடிக்கை தொடர்பாக அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுடன் இலங்கை அரசாங்கம் உடன்படவில்லை”.

இனம், மதம், வர்க்கம் மற்றும் சாதி அடிப்படையில் எந்தப் பிரிவினையோ அல்லது பாகுபாடோ இல்லாமல் அதன் மக்களின் பன்முகத்தன்மையை மதிக்கும் மற்றும் அனுபவிக்கும் ஒரு நாட்டை நோக்கிச் செயல்படுவதற்கான ஆணையை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், அந்த நோக்கத்திற்காக அரசாங்கம் வலுவாகவும் உண்மையாகவும் உறுதிபூண்டுள்ளது.

இலங்கையில் இனவெறி அல்லது தீவிரவாதம் மீண்டும் எழுவதைத் தடுப்பது அரசாங்கத்தின் முழுமையான உறுதிப்பாடாகும். எனவே, இலங்கை ஒரு உள்நாட்டு பொறிமுறை மூலம் முன்னேறும்போது, சர்வதேச சமூகத்தின் புரிதல் மற்றும் ஆதரவை இலங்கை வரவேற்கின்றது” இதுதான் அந்த பதிலின் சாராம்சம்.

இலங்கை அரசாங்கத்தின் மேற்கண்ட உத்தியோகபூர்வ பதிலின்படி, வெளிநாட்டு விசாரணையானது நாட்டை துருவமயப்படுத்த உதவும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நாடு ஏற்கனவே துருவமயப்பட்டுத்தான் உள்ளது. உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கை இழந்த காரணத்தால்தான் தமிழ் மக்கள் வெளிநாட்டு விசாரணையைக் கேட்கின்றார்கள்.

குறிப்பாக கிருசாந்தி தொடர்பில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் இருந்த ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். இலங்கைத் தீவின் வரலாற்றில் கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் பாலியல் வன்முறை தொடர்பாக நீதிமன்ற விசாரணைகளின் பின் தண்டனை வழங்கப்பட்ட ஒரு வழக்காக அது குறிப்பிடப்படுகிறது.

அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த திருமதி. சந்திரிகா தன்னை போரால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணாகவும் போரினால் பாதிக்கப்பட்ட எல்லாருடைய பிரதிநிதியாகவும் தன்னை முன்னிறுத்தி ஆட்சிக்கு வந்தார். இப்போது இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் போலவே அப்பொழுதும் சந்திரிகா ஆட்சிக்கு வந்த பொழுது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் அவரை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் பார்த்தார்கள். அந்த ஆர்வம், எதிர்பார்ப்பு காரணமாக தமிழ்ப் பகுதிகளில் சந்திரிக்க சீலை சந்திரிக்கா காப்பு என்று சந்திரிகாவின் பேரில் பொருட்கள் விற்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதி என்ற தன்னுடைய இமேஜைப் பாதுகாப்பதற்காக சந்திரிக்கா கிருசாந்தியின் வழக்கை அரசியல் தலையீடின்றி முன்னெடுக்க அனுமதித்தார். அதேசமயம் கிருசாந்தி யாழ்பாணத்தின் படித்த ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதனாலும் அவர் கல்வி கற்றது யாழ்ப்பாணத்தின் முன்னணி புரட்டஸ்தாந்து மகளிர் பள்ளிக்கூடம் என்பதனாலும் அவருடைய உறவினர்களும் அவருக்கு தெரிந்தவர்களும் அவருடைய விவகாரத்தில் தங்களுடைய முழுப் பலத்தையும் பிரயோகித்தார்கள். விளைவாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள். எனினும் தப்பிச்சென்ற ஒரு குற்றவாளி இன்றுவரை தலைமறைவாக உள்ளார்.

இவ்வாறு சந்திரிகா கிருசாந்தியின் வழக்கில் தனது நீதியை நிரூபிக்க முற்பட்டு அதன் விளைவாக கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல அந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட சோமரட்ன ராஜபக்ஷ என்ற ஒரு ராணுவ லான்ஸ் கோப்ரல் தனது மேலதிகாரிகளுக்கு எதிராக வாக்குமூலம் வழங்கினார். அந்த வாக்குமூலம்தான் செம்மணி மனிதப் புதைகுழியை வெளியே கொண்டு வந்தது. இப்பொழுதும் அவர் தன் மனைவிக்கூடாக உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அவர் வெளிப்படுத்தும் உண்மைகளை உள்நாட்டு நீதியின் மூலம் விசாரித்து, அவர் குறிப்பிடும் படை அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்தித் தண்டிப்பதற்கு அனுர அரசாங்கம் தயாராக இருக்கிறதா? அல்லது இந்த நாட்டில் இரண்டு நீதிகள் உண்டு என்ற அதே பழைய கசப்பான அனுபவம்தான் தமிழ் மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை கிடைக்கப் போகிறதா? சந்திரிகா ஆட்சிக்கு வந்த போது அவருடைய பெயரில் சேலை விற்றவர்கள் காப்பு விற்றவர்களை போலவே இப்பொழுது அனுரவின் காலத்தில் அவரை மாற்றத்தின் குறியீடாகக் காட்டும் தமிழர்கள் உண்டு. அதிலும் யாழ் பல்கலைக் கழகத்தின் அறிவுஜீவிகள் உண்டு. இவர்கள் அனைவரும் அரசாங்கம் மனித உரிமைகள் ஆணையத்துக்கு வழங்கிய பதிலில் கூறப்படுவதுபோல உள்நாட்டு நீதியானது இனங்களை துருவமயப்படுத்தாது என்பதனை நிரூபிப்பதற்காக உழைப்பார்களா?



கனடிய செய்திகள் Canadian News

# ஸ்கார்பரோ நிலக்கீழ் புகையிரத சேவை வழித்தட நீட்டிப்பின் பிரதான மைய நிலையத்தில் கட்டுமான வேலைகள் ஆரம்பமாகின



5.5 பில்லியன் டொலர்களுக்கான முதல் புதிய மூன்று நிலக்கீழ்த் தொடரி வழித்தட நிறுத்தங்களுக்கான விரிவாக்கத் திட்டத்தின்படி ஒன்ராறியோ அரசு அதிகாரப் பூர்வமாக ஸ்காபரோ மத்திய நிலையக் கட்டுமானத்தினைத் தொடங்கியுள்ளது, இத்திட்டம் முடிவடைந்தவுடன், வழித்தடம் 2ஆனது 7.8 கிலோமீட்டராக நீட்டிக்கப்பட்டு 105,000 இற்கும் மேற்பட்ட அன்றாட பாவனையாளர்கள் பயன்பெறுவதுடன், 38,000 பயணிகள் அவர்கள் இருப்பிடத்திலிருந்து நடந்து செல்லும் தூரத்திற்குள் போக்குவரத்து வசதியை அளிக்கும்.

"ஸ்காபரோ நிலக்கீழ் புகையிரத வழித்தட நீட்டிப்பின் மூலம் பொதுமக்களுக்கும், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் எமது அரசு கனடிய வரலாற்றில் மாபெரும் போக்குவரத்து விரிவாக்கத்தை அளிப்பது ஒரு திருப்புமுனையாகும்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்தார்.

ஸ்காபரோ மத்திய நிலையம், போக்குவரத்து நெரிசல் வேளைகளில் 10,000க்கும் மேற்பட்ட பயணிகளையும் 7,000 பயண இடைமாற்ற வசதிகளையும் அளிப்பதுடன், கட்டுமானத்தின்போது ஒவ்வோர் ஆண்டும் 3,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

இத்திட்டம் ஸ்காபரோ சமூகம் நீண்ட காலமாகத் தேவைக்கு ஈடுகொடுக்கும் நவீன நம்பகமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதோடு ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள அனைத்து வசதிகளுடன் மக்களை இணைக்கும்.




# "மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடத்தப்பெற வேண்டும் என்று சபை அங்கத்தவர்களுக்கு நேரடியாக வலியுறுத்தியவள் என்றவகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்"

## மார்க்கம் நகரசபை இடைத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஆரணி முருகானந்தன் தெரிவிப்பு!

## "மேற்படி வட்டாரத்தின் முன்னாள் அங்கத்தவர்கள் பலர் எனக்கு ஆதரவு வழங்குவதை பலமாகக் கருதுகின்றேன்" எனவும் அறிவிப்பு!




**- ரொறன்ரோவிலிருந்து லோகன் லோகேந்திரலிங்கம்**

"மிக விரைவில் நடைபெறவுள்ள எமது மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தலை நடத்துவதா அல்லது கடந்த தேர்தலில் இரண்டாவது எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்ற வேட்பாளருக்கு அந்தப் பதவியை வழங்குவதா என்று தடுமாறிய நிலையில் இருந்த மார்க்க நகரசபையின் தற்போதைய மேயர் மற்றும் அங்கத்தவர்கள் மத்தியில் நான் உரையாற்றுவதற்கு நேரடியாக அழைக்கப்பெற்றிருந்தேன். அங்கு எனது உரையில் பல விடயங்களை நான் சுட்டிக்காட்டினேன். இந்த இடைத் தேர்தல் நடத்தப்பெற்றால் தான் மார்க்கம் மாநகரசபையில் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதை மக்கள் அறிவார்கள். மேலும் கடந்த தேர்தலில் இரண்டாவது எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பெற்றால் அது அடுத்து வருகின்ற தேர்தலிலும் அவரது வெற்றிக்கு சாதகமாக இருக்கும். இந்த முறை ஜனநாயகத்திற்கு மாறானதாகும். எனவே தேர்தல் முறைப்படி நடத்தப்பெற வேண்டும் என்று சபை அங்கத்தவர்களுக்கு நேரடியாக வலியுறுத்தியவள் என்றவகையில் நான் பெருமிதம் அடைகின்றேன். நான் வேண்டிக் கொண்ட வகையிலும் எனது வாதத்தை அவர்கள் ஏற்றுக் கொண்ட வகையிலும் தற்போது தேர்தல் நடைபெறுகின்றது. நான் உட்பட பல வேட்பாளர்கள் போட்டியிடுகின்றோம். ஒரு வேட்பாளராக நான் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார வாக்காளப் பெருமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், எனது அனுபவம் மற்றும் அரசியல் விஞ்ஞானத்தை நான் கற்றுக் கொண்டவள் என்றவகையில் ஒரு நகரசபையின் கொள்கைகளை தீர்மானிப்பது. அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது போன்ற பல விடயங்களில் எனக்குள்ள நீண்ட கால அனுபவத்தை நான் 7ம் வட்டார அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்பெற்றால் பயன்படுத்தி இந்த வட்டாரத்தின் மேம்பாட்டுக்காகவும் நன்மைகளுக்காகவும் மக்களின் நலன்களுக்காகவும் அர்ப்பணிப்பேன்".

------------------------------------------------------------

ADVANCE VOTING DAYS:
Friday, September 26 to Sunday, September 28, 2025
10 AM to 8 PM
VOTING DAY: Monday, September 29, 2025
10 AM to 8 PM





இவ்வாறு மார்க்கம் நகரசபை இடைத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஆரணி முருகானந்தன் தெரிவித்துள்ளார். அண்மையில் கனடா உதயன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேற்படி பேட்டியில் அவர் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கையில் பல பயனுள்ள விடயங்களையும் தனது அனுபவத்தினால் பெற்ற உயர் கல்வியினாலும் தான் வகித்த பல பதவிகளினாலும் வட்டார மக்களுக்கு சிறந்த சேவைகளை நிச்சயம் வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், "மேற்படி வட்டாரத்தின் முன்னாள் அங்கத்தவர்களான லோகன் கணபதி அவர்கள் மற்றும் காலிட் உஸ்மான் அவர்கள் ஆகியோர் எனக்கு ஆதரவு வழங்குவதை பலமாகவும் கருதுகின்றேன்" எனவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கேள்விகளுக்கு பதிலளிக்கையில் ஒரு நகரசபை அங்கத்தவர்களுக்கு பல பணிகள் உள்ளன. நகரத்தின் பாதுகாப்பு - குற்றச் செயல்களைத் தடுத்தல் - போக்குவரத்து வசதிகள் - பொதுப் போக்குவரத்தின் போது நேரத்தைச் சேமித்தல் போன்ற பல கடமைகளும் பணிகளும் உள்ளன. இவற்றையெல்லாம் கவனித்து நகரசபை அங்கத்தவராக நான் ஆற்ற வேண்டிய பல பணிகள் எனக்கு உள்ளன என்பதை நான் உறுதிபட அறிவேன். எனவே எனது இளமைக் காலம் முதல் நான் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தவள் என்ற வகையிலும் மக்கள் போராட்டங்களில் முன்வரிசையில் நின்று உழைத்தவள் என்ற வகையிலும் எமது வட்டார மக்களிடம் எனக்குள்ள முழு உரிமையோடும் நான் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் எதிர்வரும் செப்டம்பர் 29ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் தங்கள் வாக்குகளை எனக்கு அளிக்கும் படியும் இயலுமானால் செப்டம்பர் 26ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை நடைபெறவுள்ள முன்வாக்குப் பதிவில் பங்குபற்றி தேர்தல் தினத்திற்கு முன்பாகவே எனக்கு தங்கள் வாக்குகளை அளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்" என்று தனது பேட்டியை நிறைவு செய்தார்.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY


| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5




# 2025 ஆம் ஆண்டலிருந்து ஒரு குறிப்பிட்டக் குழுவினருக்கு இனி பிரித்தானிய குடியுரிமை மற்றும் ILR வழங்கப்பட மாட்டாது

**ஈழத்து நிலவன்**
**தேதி: 10 செப்டம்பர் 2025**

## செயல் சுருக்கம்

2025 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசு குடியேற்றக் கொள்கைகளில் முக்கியமான மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை நிரந்தர குடியிருப்பு அனுமதி (ILR) மற்றும் பிரித்தானிய குடியுரிமை தொடர்பான வழிகளை பெரிதும் பாதிக்கின்றன. முக்கியமான முன்மொழிவுகளில் ஒன்று புள்ளிவிவர அடிப்படையிலான குடியேற்ற (Points-Based System) முறையில் உள்ள பல குடியேற்றக் குழுக்களுக்கு ILR பெறுவதற்கான காலக்கெடுவை 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டாக நீட்டித்தல். மேலும், 2025 பிப்ரவரி 10 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள "நல்ல பண்பு" வழிகாட்டுதலின்படி, பிரித்தானியாவிற்கு சட்டவிரோதமாக நுழைந்தவர்கள் பெரும்பாலும் குடியுரிமைக்கு தகுதி பெற முடியாது. இந்தக் கட்டுரையில் மாற்றங்களின் சட்டப்பூர்வ பின்னணி, பாதிக்கப்படும் குழுக்கள், தற்போதைய நிலைமை மற்றும் அரசியல் சூழல், விளைவுகள் மற்றும் பரிந்துரைகள் விரிவாக விவரிக்கப்படுகின்றன.

## பின்னணி: 2025 இல் என்ன மாற்றப்பட்டது?

2025 மே மாதத்தில் உள்துறை அமைச்சகம் Restoring Control over the Immigration System என்ற வெள்ளைப் புத்தகத்தை வெளியிட்டது. இதில் குடியேற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் பல திட்டங்கள் முன்மொழியப்பட்டன. அவற்றில் முக்கியமானது புள்ளிவிவர அடிப்படையிலான குடியேற்றக் குழுக்களுக்கு ILR பெறுவதற்கான வழக்கமான காலக்கெடுவை 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டாக நீட்டித்தல். இதே நேரத்தில், 2025 பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டுதலின்படி, சட்டவிரோதமாக பிரித்தானியாவிற்குள் நுழைந்தவர்களின் குடியுரிமை விண்ணப்பங்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படும் என தெளிவுபடுத்தப்பட்டது.

## சட்ட மற்றும் கொள்கை விவரங்கள்

- ILR: 10 ஆண்டு வழக்கமான பாதை - வெள்ளைப் புத்தகத்தின் படி, பெரும்பாலான திறமையாளர் மற்றும் வேலை அடிப்படையிலான குடியேற்றக் காரர்களுக்கு 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டாக நீட்டிக்கப்படுகிறது. "Earned Settlement" எனப்படும் சிறப்பு வழி அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது, ஆனால் அதன் விதிகள் இன்னும் தெளிவாகவில்லை.

- நல்ல பண்பு மற்றும் சட்டவிரோத நுழைவு - 2025 பிப்ரவரி 10க்குப் பிறகு விண்ணப்பிக்கும் போது, சட்டவிரோத நுழைவு சம்பந்தப்பட்டிருப்பின் குடியுரிமை விண்ணப்பம் பெரும்பாலும் நிராகரிக்கப்படும்.

- விலக்குகள் - பிரித்தானிய குடிமக்களின் துணைவியர் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் 5 ஆண்டு பாதையில் தொடர்வார்கள். EU Settlement Scheme (EUSS) கீழ் உள்ளவர்கள் இந்த மாற்றத்தால் பாதிக்கப்படமாட்டார்கள்.

## யார் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்?

- Skilled Worker விசா வைத்திருப்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்: இவர்கள் ILR பெறுவதற்கு இரட்டிப்பு காலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

- Hong Kong BN(O) விசா வைத்திருப்பவர்கள்: சட்டம் பின் நோக்கி (retroactive) அமல்படுத்தப்பட்டால் இவர்கள் பாதிக்கப்படலாம்.

- அடைக்கலம் தேடியவர்கள் அல்லது சட்டவிரோதமாக நுழைந்தவர்கள்: இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், புதிய வழிகாட்டுதலினால் குடியுரிமை விண்ணப்பம் பெரும்பாலும் மறுக்கப்படும்.

- தொழில் மற்றும் பல்கலைக்கழகங்கள்: நீண்டகால தங்கும் உரிமை தாமதமாகுவதால் பணியாளர்களை ஈர்ப்பதும், தக்கவைத்தலும் சிரமமாகும்.

## தற்போதைய நிலைமை (10 செப்டம்பர் 2025 நிலவரப்படி)

- கொள்கை மற்றும் சட்டம்: வெள்ளைப் புத்தகம் கொள்கை அறிவிப்பு மட்டுமே சட்ட திருத்தங்கள் தேவைப்படுகிறது. எனினும் "நல்ல பண்பு" தொடர்பான புதிய வழிகாட்டுதல் ஏற்கனவே அமலில் உள்ளது.

- உடனடி விளைவு: 2025 பிப்ரவரி முதல், சட்டவிரோத நுழைவுடன் தொடர்புடைய குடியுரிமை விண்ணப்பங்கள் மறுக்கப்படுகின்றன.

- சட்ட சவால்கள் மற்றும் அரசியல் விவாதங்கள்: மனித உரிமை அமைப்புகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் இதை சவால் செய்கின்றனர். அரசு இதை குடியேற்றத்தை கட்டுப்படுத்த தேவையானது என்று கூறுகிறது.

- பின் நோக்கி அமல்படுத்தப்படுமா?: தற்போதைய பெரும் அச்சம், ஏற்கனவே பிரித்தானியாவில் உள்ளவர்களுக்கும் இந்த புதிய 10 ஆண்டு விதி பொருந்துமா என்ற கேள்வியே.

## விளைவுகள்

- குடியேற்றக்காரர்களுக்கு: நீண்டகால சட்டமற்ற நிலை, கூடுதல் செலவுகள் மற்றும் பாதுகாப்பின்மை உருவாகும்.

- தொழில் துறைகளுக்கு: NHS, தொழில்நுட்பம், உயர்கல்வி போன்ற துறைகள் திறமையான பணியாளர்களை ஈர்ப்பதில் சிரமம் அடையும்.

- சமூக ஒருமைப்பாட்டிற்கு: குடியுரிமை பாதைகள் மூடப்பட்டால், சமூக ஒற்றுமையும் பங்கேற்பும் பாதிக்கப்படலாம்.

## நடைமுறை பரிந்துரைகள்

- சட்ட ஆலோசனை பெறுதல் - தனிப்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ப ஆலோசனை பெறுவது அவசியம்.

- விண்ணப்ப நேரம் கவனித்தல் - ILR அல்லது குடியுரிமை பெற தகுதி நெருங்கி இருந்தால், விரைவில் விண்ணப்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

- ஆவணங்களைத் தயார் செய்தல் - வேலை, வரி, சமூக பங்களிப்பு போன்ற ஆதாரங்களைச் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

- விலக்குகளைப் புரிந்துகொள்ளுதல் - EUSS அல்லது பிரித்தானிய குடிமக்களின் துணைவியர் போன்ற விலக்குகள் உங்களுக்கு பொருந்துமா என உறுதி செய்யவும்.

- தொழில் நிறுவனங்கள் - பணியாளர் திட்டங்களை மறுபரிசீலனை செய்து, குடியேற்ற உதவியை வழங்க வேண்டும்.

## எதிர்கால சட்ட மற்றும் அரசியல் பாதைகள்

- சட்ட மாற்றங்கள்: குடியேற்ற விதிகளில் அதிகாரப்பூர்வ திருத்தங்கள் தேவைப்படுகிறது.

- நீதிமன்ற சவால்கள்: "நல்ல பண்பு" வழிகாட்டுதலுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் தொடர வாய்ப்பு உள்ளது.

- கொள்கை மாற்றங்கள்: சமூக மற்றும் தொழில் அழுத்தங்கள் காரணமாக அரசு விலக்குகளை தெளிவுபடுத்தக்கூடும்.


2025 ஆம் ஆண்டில் பிரித்தானிய குடியேற்றக் கொள்கைகள் பெரும் மாற்றத்தைக் கண்டுள்ளன. சில நடவடிக்கைகள் ஏற்கனவே அமல்படுத்தப் பட்டுள்ளன, மற்றவை இன்னும் சட்ட திருத்தங்களை எதிர்நோக்குகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக சட்ட ஆலோசனையை நாடி, தேவையான ஆவணங்களை தயார் செய்து, உத்தியோகபூர்வ அறிவிப்புகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

ஈழத்து நிலவன்
பிரித்தானிய மற்றும் சர்வதேச கொள்கை ஆய்வாளர்' குடியேற்றம், குடியுரிமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நிபுணர்

---

**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட 150 பேருக்கு சர்வதேச நீதிக்கான கோரிக்கை!



மூன்றரை தசாப்தங்களுக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சம் புகுந்தபோது இலங்கை அரசாங்கப் படைகளால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 150ற்கும் மேற்பட்டோருக்கு நாட்டில் எந்த நீதியையும் எதிர்பார்க்க முடியாது எனக் கூறும் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மதத் தலைவர்கள், தங்கள் அன்புக்குரியவர்களுக்கு நீதியை நிலைநாட்ட சர்வதேச தலையீட்டைக் கோருகின்றனர்.

“இது இலங்கை அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட கிழக்கு மாகாண இன அழிப்பே இது. வீதியில் நிற்கின்றோம். நீதி தேவதைக்கு கண் இல்லை, அதுபோலத்தான் இந்த விவகாரமும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கடந்த 35 வருடங்களாக உள்ளக பொறிமுறை அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஊடாக கிடைக்கப்பெறாத நீதி இனியும் கிடைக்காது. ஆகவேதான் நாங்கள் சர்வதேச நீதிபொறிமுறை ஊடாக ஒரு தீர்வு கிடைக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.”

35 வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி செப்டெம்பர் 5, 2025ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் நினைவேந்தலில் பங்கேற்ற மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி அமலராஜ் அமலநாயகி இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மற்றும் தெற்கில் பதிவான 10,000க்கும் மேற்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கூறியிருந்தார்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்க கிடைத்த சுமார் 17,000 முறைப்பாடுகளில் மீதமுள்ள 10,000 முறைப்பாடுகளை இரண்டு ஆண்டுகளுக்குள் தீர்ப்பதற்கான ஒரு முன்மொழிவை அமைச்சரவை இந்த வாரம் அங்கீகரித்தது.



“அதற்கமைய இன்னலுற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் விசாரணை மற்றும் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான விசேட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், குறித்த பணிகளுக்காகவும் ஓய்வுநிலை நீதிபதிகள், சிரேஷ்ட நிர்வாக அலுவலர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட தகைமையுடன் கூடிய நபர்கள் 75 பேருடன் கூடிய உப பணிக்குழு 25 குழுக்களை நியமிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.”

மூன்றரை தசாப்தங்களாக தனது மகனுக்கு நீதி கேட்டுப் போராடி வரும் ஒரு தாயின் கதியை, அமல்ராஜ் அமலநாயகி பிரதேச ஊடகவியலாளர்களுக்கு பின்வருமாறு விளக்கினார்:

“போன வருடம் நினைவேந்தலுக்கு வந்த அம்மாவால் இந்த வருடம் நினைவேந்தலுக்கு வரமுடியாமல் படுக்கையில் இருக்கின்றார். தன்னுடைய மகனுக்காக கண்ணீர் வடித்த கண்ணீர் வடித்து படுக்கையில் கிடக்கின்றார். தன்னுடைய மகனுக்கு நீதி கேட் முடியாத நிலைமையில் அந்த தாய் இருக்கின்றார்.”

## வெள்ளைக் கொடி

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி மட்டக்களப்பு வந்தாறூமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் கொம்மாதுறை இராணுவ முகாமில் இருந்து வந்தவர்களால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தேடுதல் மற்றும் அழிவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வாழைச்சேனை இராணுவ முகாமின் துருப்புக்கள் தாக்குதல் நடத்தியமையால், வந்தாறுமூலை, சுங்கன்கேணி உள்ளிட்ட கிராமங்களிலிருந்து தப்பி வந்தவர்கள் பல்கலைக்கழகத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். பாதுகாப்பு அளித்த பல்கலைக்கழக அதிகாரிகள் பல்கலைக்கழகத்தின் முன் வெள்ளைக் கொடிகளை ஏற்றியிருந்தனர்.

பல்கலைக்கழக நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு வழங்கிய சாட்சியங்களுக்கு அமைய, அன்றைய தினம் காலை 9 மணியளவில் அங்கு வந்த இராணுவத்தினர், தஞ்சமடைந்திருந்த அனைவரையும் வரிசையாக நிறுத்தி, தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் குழுவை, இரண்டு பேருந்துகளில் அழைத்துச் சென்றுள்ளனர்.

அன்றைய தினம் மட்டக்களப்பு சத்துருகொண்டான், பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி ஆகிய கிராமங்களை இராணுவத்தினர் தாக்கி மேலும் பல கிராம மக்களை கடத்திச் சென்றனர். இவர்களில் எவரும் திரும்பி வரவில்லை.

## கெப்டன் முனாஸ் மற்றும் கெப்டன் ரிச்சர்ட் டயஸ்

கைதிகளை அழைத்துச் செல்ல கெப்டன் முனாஸ் எனப்படும் இராணுவ அதிகாரி உள்ளிட்ட குழுவினர் வந்தனர். கெப்டன் முனாஸ், கெப்டன் ரிச்சர்ட் டயஸ் அழைக்கப்பட்டதாக மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் அருட்தந்தை ஹரி மில்லர் 1993ஆம் ஆண்டு “ஹிரு“ பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது முதலாவது நிர்வாகத்தின் போது நியமித்த “கடத்தல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுக்களில்” ஒன்றான வடக்கு, கிழக்கு ஆணைக்குழு, வந்தாறூமூலை படுகொலை தொடர்பான தகவல்களை வெளியிட்டது.

கிருஷ்ணபிள்ளை பாலகிட்ணர் தலைமையிலான மூவரடங்கிய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில், இச்சம்பவத்தில் காணாமல் போனவர்களுக்கு, கெப்டன் முனாஸ், கெப்டன் பாலித மற்றும் கெப்டன் குணரத்ன ஆகியோரே பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடத்தலில் ஆயுதமேந்திய கும்பலை சேர்ந்த மேஜர் மஜீத் மற்றும் மேஜர் மொஹான் ஆகிய இரு தலைவர்களும் ஈடுபட்டதற்கான ஆதாரங்களை ஆணைக்குழு பதிவு செய்திருந்தது.

## முன்னாள் இராணுவத் தளபதி

1990 செப்டெம்பர் 8 ஆம் திகதி முகாமுக்கு வந்த அப்போதைய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, கைது செய்யப்பட்ட அனைவரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததாக, சாட்சிகள் ஆணைக்குழுவிடம் கூறியிருந்தன.

அந்த “குற்றவாளிகள்” தொடர்பில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை முன்னாள் இராணுவத் தளபதி தெரிவித்திருக்கவில்லை.

எனினும், அந்தந்த ஆணைக்குழுக்களின் செயலாளராக இருந்த எம்.சி.எம். இக்பால், கடத்தல் மற்றும் கொலைகளுடன் தொடர்புபட்டதாக ஆணைக்குழுவால் அடையாளம் காணப்பட்ட எந்தவொரு இராணுவ அல்லது பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மேலதிக சட்ட விசாரணை நடத்தப்படக்கூடாது என உயர் அரசியல் அதிகாரம் உத்தரவிட்டதாக பின்நாட்களில் கூறியிருந்தார்.



## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






## OCCUPATIONAL DISABILITY RESPONSE TRAINING

PREVENTION LINK

உங்கள் தனிப்பட்ட பணியிடத்திற்கும் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தேவையான திறன்கள், தன்னம்பிக்கை மற்றும் சமூகக் கட்டமைப்பைப் பெறுங்கள்.

தடுப்பு இணைப்பு உயர்தர, விரிவான படிப்புகளை வழங்குகிறது தொழிலாளர்களின் இழப்பீடு, இயலாமை தங்குமிடம், வேலைக்குத் திரும்புதல் மற்றும் மனநலம் போன்ற தலைப்புகளை உள்ளடக்கியது, மேலும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஒரே மாதிரியாக நன்மை பயக்கும்.

## FALL TRAINING 2025

**Psychological Health & Safety and Return to Work**
» September 28 – October 3 (In-person)

**Level Two: Benefits and Services**
» October 9-23 (Virtual)

**Mental Health 101, Mindfulness, Challenges in Life & Self Care**
» September 19 (In-person)
» October 28 (Virtual)


**Return to Work 101**
» December 2 (Virtual)

**Principles of Accommodation Law**
» December 3 (Virtual)

Scan the QR code to register for a course.

Contact us at info@preventionlink.ca








Elect

## Zakir Patel

FOR SCARBOROUGH – ROUGE PARK

*Getting Things Done!*

Scarborough Rouge Park
தொகுதிக்கான பலமானதும் நம்பிக்கையுடையதுமான குரல்!



**ADVANCE POLLS**
**சனிக்கிழமை செப்டம்பர் 20**
மற்றும்
**ஞாயிற்றுக்கிழமை செப்டம்பர் 21**
காலை 10.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணிவரை

**ELECTION DAY**
**திங்கட்கிழமை செப்டம்பர் 29**
காலை 10.00 மணி தொடக்கம்
இரவு 8.00 மணிவரை


**தலைமைத்துவம், சேவை மற்றும் கடமை உணர்வு ஆகியன**

**Public Service Leadership Roles:**
✓ Vice-Chair - Toronto District School Board (TDSB)
✓ Chair - Finance, Budget & Enrollment Committee, TDSB
✓ Member - Special Education Advisory Committee, TDSB

**Community & Volunteer Involvement:**
✓ Secretary - Scarborough Cricket Association
✓ Volunteer - Scarborough Health Network (SHN)
Scarborough Muslim Community

**Recognition & Achievements:**
✓ Urban - Hero Award - Metroland Media
Recognized for Pandemic Community Support
✓ Remarkable Father's Award
Nigerian Canadian Newspaper Canada

Need ride to vote, please call:
**437 267 6843**
**647 249 8528**




HOW YOU CAN HELP?
- Volunteer
- Reqest a lawn sign
- Make a donation

செப்டம்பர் 29 அன்று சாகிர் பட்டேல் அவர்களுக்கு
25ம் வட்டார நகரத்தின் அங்கத்தவராக தேர்ந்தெடுக்க வாக்களியுங்கள்

647-249-8528 | info@votezakir.ca | www.votezakir.ca | zakir4rouge

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

# மண்டைதீவு கொலைகள் தொடர்பில் உடன் விசாரணை வேண்டும்

## ஜனாதிபதி அனுரவுக்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் அவசர கடிதம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



மண்டைதீவு கொலைகள் தொடர்பாக வெளியாகியுள்ள கருத்துக்களின் அடிப் படையில் விசாரணைகளை முன்னெடுத்து மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் அவசர கடிதம் எழுதப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவை விசாரிக்கப்படுமாயின் நாமும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க தயாராகவே இருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

10ம் திகதி புதன்கிழமையன்று யாழ். ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறிகையில், "ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்ற நிலையில், ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையில் கடந்த காலங்களில் இந்த நாட்டிலே இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்தினரும் புலிகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் மத்தியில் அவை பேசுபொருளாக இருப்பதனை தவிர்க்கும் நோக்கிலும்,

கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்பட்டும் என்று தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக சொல்லி வருகின்ற நிலையில், கடந்த காலங்களில் எமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மீண்டும் பேசுபொருளாக்கி எம்மை அரசியல் களத்தில் இருந்து முழுமையாக அகற்ற வேண்டும் என்று உள்ளூற விரும்புகின்ற பிரகிருதிகளும், இதன்மூலம் புலி ஆதரவு தரப்பினரை மகிழ்விக்க முடியும் என்று கணக்கு போடுகின்றவர்களும், தங்களுடைய அனைத்து வளங்களையும் பயன்படுத்தி எமக்கு எதிரான செயற்பாடுகளை, பிரசாரங்களை முன்னெடுத்து வருவதை அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.

அதற்காக, கடந்த காலங்களில் எமது கட்சியின் செயற்பாட்டாளர்களாக இருந்து கட்சி நிலைப்பாடுகளுக்கு மாறாக சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட சிலர் விலைக்கு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதையும் அவதானித்து வருகின்றோம்.

தன்னுடைய வாழ்நாளையே தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்காக அர்ப்பணித்து மானசீகமாக மக்களுக்காக உழைத்து வருகின்ற - தன்னை நோக்கி வருகின்ற சவால்களை எல்லாம் எதிர்கொள்ளும் நெஞ்சுரம் மிக்க தலைமைத்துவ ஆளுமையான தோழர் டக்ளஸ் தேவானந்தாவை தலைமையாக கொண்டு செயற்படுகின்ற நாம் இவ்வாறான சமூக ஊடக பரபரப்புக்களை அலட்டக்கொள்ளவில்லை.

எமக்கு எதிரான குற்றசாட்டுக்கள் அனைத்தும் அந்தந்தக் காலப் பகுதில் எமக்கு எதிராக சுமத்தப்பட்ட பொய்கள் என்பதை உறுதியாக சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# தந்தை கொரோனாவால் உயிரிழந்த நிலையிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை புரிந்த மாணவிக்கு கௌரவிப்பு!



யாழ்ப்பாணம் - வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையில் கல்வி கற்று, புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 140 புள்ளிகளை பெற்று சாதனை புரிந்த ஜெயரஞ்சன் அஸ்வினிக்கான கௌரவிப்பு 11ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் நடைபெற்றது.



இதன்போது, புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் நிருசன் புஷ்பராஜா என்பவரால் இருபத்தையாயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டதுடன், புவனேஸ்வரன் யசிந்தாவின் நினைவாக மாணவிக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மாணவியின் தந்தையான தியாகராஜா ஜெயரஞ்சன் என்பவர் கொரோனா தொற்றுக்கு இலக்காகி கடந்த 2020ஆம் ஆண்டு உயிரிழந்தார். இதனால் அவரது குடும்பத்திற்கு ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியிலும் விடாமுயற்சியுடன் கல்வி பயின்று மாணவி இவ்வாறு சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளார்.

பாடசாலை அதிபர் பொ.சிவரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் கந்தையா இலங்கேஷ்வரன், பழைய மாணவர் சங்க செயலாளர் மா.நாகரட்ணம், அபிவிருத்தி சங்க உறுப்பினர் தி.விஜயரஞ்சன், ஆசிரியர்கள், மாணவர்கள், குறித்த மாணவியின் தாயார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட வள்ளுவர் சிலை!

வலிகாமம் வடக்கு மாவிட்டபுரம் வள்ளுவர் சனசமூக நிலையத்தில் திருவள்ளுவர் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் முளு.அஜித்குமாரின் தாயினுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு கருங்கல்லினாலான வள்ளுவர் சிலையே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த திறப்பு விழா வைபவத்தில் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், கிராம மக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் சங்கானை பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை!

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 16.09.2025 அன்று சங்கானைப் பிரதேச செயலகத்தில் காலை 8.30 தொடக்கம் மாலை 3.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது கீழ்வரும் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

1. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை)
2. ஓய்வூதியம் தொடர்பான சேவைகள்
3. பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள்
4. மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள்
5. பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள்
6. பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்
7. மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள்
8. திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள் (NVQ)
9. சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்
10. முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள்.
11. காணி தொடர்பான சேவைகள்
12. மருத்துவ முகாம் - பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை (ஊயவயசயஉவ), இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் (வறியவர்களுக்கு)

போன்ற சேவைகள் இந்த நடமாடும் சேவையின்போது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# செம்மணிக்கு செல்லாததும் கச்சதீவுக்கு சென்றதும் ஏன்?

**"யாழ்ப்பாணத்திற்கு குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாளே வந்து விட்ட ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி நின்ற போதும், செம்மணியை வாகனத் தொடரணியாகக் கடந்து பயணித்த போதிலும், செம்மணி மனித புதைகுழியை சென்று பார்வையிடவில்லை. செம்மணிப் பகுதியில் வாகனத்தை மெதுவாக செலுத்திக் கூட அப்பகுதியை பார்க்க அவர் விரும்பவில்லை."**

---------------------------------------------------------------------------- பாலா ---

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த *1* ஆம் திகதி வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்து பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தமை, கச்ச தீவுக்கு அதிரடி விஜயம் மேற்கொண்டமை எந்தளவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றிருந்ததோ அதற்கும் மேலாக ஜனாதிபதி செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு செல்லாது புறக்கணித்தமை தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த *1* ஆம் திகதி வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார, யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் 3ஆவது கட்டத்தின் பணிகள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் யாழ். பிரதேச அலுவலகத் திறப்பு, யாழ்ப்பாணம், மண்டை தீவு பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள நவீன கிரிக்கெட் மைதானத்தின் பணிகள், உலக தென்னை தினத்தை முன்னிட்டு புதுகுடியிருப்பில் "கப்துரு சவிய" தேசிய வேலைத்திட்டம், முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் போன்ற அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் இலங்கை - இந்திய மீனவர்களினாலும் இலங்கை - தமிழக அரசியல்வாதிகளினாலும் கடும் சர்ச்சைக்குரியதாக்கிவிட்டுள்ள கச்சதீவுக்கும் அதிரடி கண்காணிப்பு விஜயம் செய்து "இதுஎங்க ஏரியா உள்ளே வராதே" என்ற செய்தியை தமிழக, இந்திய அரசுகளுக்கும் இந்திய மீனவர்களுக்கும் நெற்றிப்பொட்டில் அடித்தாற்போல் செய்தியை கூறியதுடன் அங்கு சென்ற முதல் இலங்கை ஜனாதிபதி என்ற பெயரையும் அநுரகுமார திசாநாயக்க வரலாற்றில் பதிவு செய்து கொண்டார்.

வடக்கிற்கான விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார பங்கேற்கும் நிகழ்வுகள், பயணம் செய்யும் இடங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அதில் ஏற்கனவே திட்டமிடப்படாத அல்லது திட்டமிட்டும் வெளிப்படுத்தப்படாத பயணமாக கச்சதீவுக்கான ஜனாதிபதி அநுரகுமாரவின் கடற்பயணம் அமைந்திருந்ததுடன் அந்தப்பயணம் இலங்கையர்களுக்கு குறிப்பாக வடக்கு மீனவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சியை, நம்பிக்கையை கொடுத்திருந்தது.

அதேநேரம் செப்டம்பர் *1* ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்யவுள்ளதாக அறிவிப்புக்கள் வெளியான நிலையில் இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி நாட்டினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ள செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு செல்வார் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடமும் தமிழ் அரசியல் தரப்புக்களிடமும் ஏற்பட்டிருந்தது. அதைவிட ஜனாதிபதி செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு வருகைதர வேண்டுமென்ற வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டிருந்தன.

இதற்கு வலுசேர்க்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்வார் என முன்னதாக, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் உறுதியளித்திருந்தார். அதுமட்டுமன்றி அரச தரப்பின் பல்வேறு தரப்பினராலும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி உரையாற்றும் போது, "செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் எவ்வித மாற்றமும் இல்லை. செம்மணியில் தோண்டப்படும் மனித எச்சங்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் இந்த விசாரணைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது" என தமிழ் மக்களுக்கு உறுதியளித்த நிலையில் அவர் எப்படியும் செம்மணிக்கு வந்து மனிதப்புதைகுழிகளை பார்வையிடுவார் என்ற நம்பிக்கை எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்திருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்திற்கு குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாளே வந்து விட்ட ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி நின்ற போதும் செம்மணி வீதியை வாகனத் தொடரணியாக ஜனாதிபதி அநுரகுமார கடந்து பயணித்த போதிலும், செம்மணி மனித புதைகுழியை சென்று பார்வையிடவில்லை. செம்மணிப் பகுதியில் வாகனத்தை மெதுவாக செலுத்திக் கூட அப்பகுதியை பார்க்க அவர் விரும்பவில்லை. இது தமிழ் மக்களிடம் கடும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்திவிட்டதுடன் இலங்கை ஜனாதிபதிகள் வரிசையில் ஜனாதிபதி அநுரகுமாரவையும் ஒரு மாற்றமில்லாத ஜனாதிபதியாக அடையாளப்படுத்தியுள்ளது.

ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி அமைச்சர், எம்.பி.க்கள் ஏற்கனவே செம்மணி மனிதப் புதைகுழியை சென்று பார்வையிட்டுள்ளனர். இலங்கையில் செம்மணி மட்டுமன்றி, கொக்குத்தொடுவாய், மண்டைதீவு, மன்னார், கொழும்பு துறைமுகம் என பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் உள்ளநிலையில் இந்த புதைகுழிகளின் உரிமையாளர்கள் ரணில் மற்றும் ராஜபக்சக்களே தவிர நாம் அல்ல. இந்த புதைகுழிகள், காணாலாலாக்கப்பட்டோருடன் தொடர்புடைய சிலர் வடக்கிலும் உள்ளனர். செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவாகியுள்ளனர். இந்த மனிதப்புதைகுழிகள் தொடர்பிலான, விசாரணைகள் போன்றவற்றுக்கு நாம் போதியளவு நிதியை ஒதுக்கி வசதிகளை செய்து கொடுத்துள்ளோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க பகிரங்கமாகவே அறிவித்திருந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார செம்மணிக்கு செல்லாதது ஏன்? கச்சதீவுக்கு சென்றது ஏன்?

இதில் முதல் கேள்விக்கு பதில்களைத் தேடினால் முதல் பதில் தமக்கோ, தமது கட்சிக்கோ, தமது அரசுக்கோ தொடர்பில்லாத செம்மணி மனிதப்புதைகுழியை ஜனாதிபதி அநுரகுமார பார்வையிடாததற்கு இனவாத சிந்தனையும் சிங்களவர்களை மட்டும் திருப்திப்படுத்தும் அரசியலுமே பிரதான காரணம். இரண்டாவது பதில் இந்த மனிதப்புதைகுழியுடன் இராணுவத்தினர் குற்றம்சாட்டப்படும் நிலையில் முப்படைகளின் தளபதியாக ஜனாதிபதி அநுரகுமார செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு சென்று பார்வையிட்டு கருத்துக்களைக் கூறி இராணுவத்தின் வெறுப்பை, அதிருப்தியை சம்பாதிக்க விரும்பவில்லை.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி மனிதபுதைகுழிப் பகுதிக்கும் விஜயம் செய்திருந்தால் இலங்கையில் அகழப்படும் மனிதப் புதைகுழிப் பகுதியை சென்று பார்வையிட்ட முதல் ஜனாதிபதி என்ற வரலாற்று பதிவில் ஜனாதிபதி அநுரகுமார பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். தமிழ் மக்கள் மனங்களிலும் அவர் நீங்கா இடம்பிடித்திருப்பார். ஆனால் சிங்களவர்களினால், சிங்கள படைகளினால் ஏற்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழியை பார்வையிட்ட முதல் ஜனாதிபதி என சிங்களவர்களினால் அநுரகுமார புறக்கணிக்கப்பட்டிருப்பார், வெறுக்கப்பட்டிருப்பார் விமர்சிக்கப்பட்டிருப்பார். ஆகவே தான் சிங்களவர்களே முதல் விருப்பத் தெரிவு, அவர்களை பகைக்க முடியாது என்ற அடிப்படையில்தான் ஜனாதிபதி அநுரகுமார செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு இடத்திற்கு செல்லவில்லை.

இரண்டாவது கேள்விக்கான பதில். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார தனது பயண நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத அல்லது உள்ளடக்கப்பட்டும் இறுதிவரை வெளிப்படுத்தப்படாத கச்சதீவு பயணத்தை மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணம் இந்தியாவை கோபப்படுத்தும், இந்தியாவுடன் பகைக்க நேரிடும், அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும், அரசியல் ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்தும் எனத் தெரிந்தும் தென்பகுதி சிங்களவர்களையும், வடக்குத் தமிழர்களை திருப்திப்படுத்த, எமது நிலத்தின் ஒரு அங்குலத்தை யேனும் விட்டுக்கொடுக்க நாம் தயாரில்லையென்பதனை வெளிப்படுத்த, நான் தேசப்பற்றாளன் என்பதனை நிரூபிக்க, எந்தவொரு ஜனாதிபதியும் செய்யாததை அநுரகுமார செய்தாரென பேச வைக்கவென சிங்கள, தமிழ் அரசியல் ஆதாயத்திற்காகவே ஜனாதிபதி கச்சதீவுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு வரலாற்றுப்பதிவை ஏற்படுத்தினார்.

இந்த செம்மணி மனிதப்புதைகுழி புறக்கணிப்பு மூலம் சிவப்பு சட்டைக்காரர்களான ஜே.வி.பி.யினர் இன்னும் இனவாதத்திலிருந்து மாறவில்லை. அவர்கள் ஒருபோதுமே மாறப் போவதில்லை. "மாற்றம்", "புதிய திசை" என்பதெல்லாம் வெறும் கோஷம். என்னதான் தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியைப் போட்டு "மாற்றம்" ஏற்படுத்த வந்தவர்களாக, புதிய திசையில் நாட்டையும் மக்களையும் பயணிக்க வைக்க வந்தவர்களாக தம்மைக் காட்டிக்கொள்ள ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான ஜே.வி.பி.யினர் மாறு வேடத்தைப் போட்டாலும் "போக்கிரி" படத்தில் வரும் வடிவேலு போல் "மண்டை மேல இருந்த கொண்டையை மறந்துட்டியே" என்ற கதையாகவே தமது இனவாத சிந்தனையிலிருந்து அவர்கள் மாறவே இல்லை. மாறப்போவதுமில்லை என்பதையே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் யாழ்ப்பாண விஜயமும் செம்மணி மனிதப்புதைகுழி விடயமும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

ரோஹண விஜேவீர, சோமவன்ச அமரசிங்க, தற்போது அநுரகுமார தலைமைவரை ஒரு போதுமே ஜே.வி.பி.யினர் தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஒரு துரும்பைக்கூட அசைத்தவர்கள் அல்ல. அரசுக்கு எதிராக ஆயுத கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும் ஜே.வி.பி.யினர் ஒன்றும் புனிதமானவர்களோ மாற்றமானவர்களோ அல்ல. அவர்களும் பக்கா இனவாதிகள்தான். ஜே.வி.பி.யாக பகிரங்கமாக இனவாத முகத்தை காட்டி வந்த அவர்கள் தற்போது தேசிய மக்கள் சக்தியாக போலி முகத்தை தமிழ் மக்களுக்கு சர்வதேசத்துக்கும் காட்டுகின்றார்கள்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை அழிக்க 50000 சிங்கள இளைஞர்களை இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு செய்து கொடுத்தவர்கள். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நோர்வே அனுசரணையிலான சமாதான முயற்சிகளை சீர்குலைத்து யுத்தத்துக்கு தூண்டியவர்கள். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சுனாமி பொதுக்கட்டமைப்பை கடுமையாக எதிர்த்து மக்களைத்தூண்டி போராட்டங்களில் ஈடுபட்டவர்கள், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களை வழக்கு தாக்கல் செய்து பிரித்தவர்கள். தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை அழித்தொழிக்க ஆட்சிபீடமேறிய அனைத்து அரசுகளுக்கும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியவர்கள் ஜே.வி.பி.யினர்.

இவ்வாறானவர்கள் "மாற்றம்" என்ற கோஷத்தோடும் "புதிய திசை" என்ற வாக்குறுதியுடனும் தேர்தல்களில் களமிறங்கிய போது இவ்வாறானவர்களை தமிழ் மக்கள் நம்பி வாக்களித்தமை, தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவார்கள், தமிழ் மக்களுக்கு புதிய திசையை காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தமையெல்லாம் "இறைச்சிக் கடைக்காரனிடம் ஆடு கருணையை எதிர்பார்ப்பதற்கு" ஒப்பானது. ஜனாதிபதி அநுரகுமார அரசின் "மாற்றம்" தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே கொடுக்கும் என்பதனை புதிய திசையில் பயணிக்க விரும்பிய தமிழ் இளையோர்கள் இன்னும் சிறிது காலத்தில் புரிந்து கொள்வார்கள்.






# சீனாவின் விருப்பத்தை நிறைவேற்றப் பார்க்கிறாரா இலங்கை அமைச்சர் சந்திரசேகரன்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

## மீனவ மக்களை திரட்டி போராட தயங்க மாட்டோம் என்கிறார் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பிராஜா!

பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் கடல் அட்ட பண்ணையை யாழில் விரிவுபடுத்தப் போவதாக அறிவித்துள்ள கடற் தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனுக்கு எதிராக மீனவ மக்களை ஒன்று திரட்டி போராட தயங்க மாட்டோம் என அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி தம்பிராஜா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் 10ம் திகதி புதன்கிழமையன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மக்களின் போனஸ் ஆசனத்தில் அமைச்சரான இராமலிங்கம் சந்திரசேகரன் மீது மீனவ மக்கள் நம்பிக்கை வைத்தனர்.

ஏனெனில் கடந்த காலங்களில் கடற் தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா கடல் அட்டை பண்ணைகளை விரிவுபடுத்தியபோது அதற்கு எதிராக மீனவ மக்களுடன் இணைந்து குரல் கொடுத்தவர் தற்போதைய அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன்.

ஆனால் தற்போது அமைச்சராகிய நிலையில் எல்லாவற்றையும் மறந்து சீனாவின் பிரதிநிதியாக சீன நாட்டின் விருப்பங்களை தமிழர் பகுதிகளில் நிறைவேற்றுபவராக மாறத் தொடங்கியுள்ளார் அமைச்சர் சந்திரசேகரன்.

அவர் ஒரு காணொளியில் கூறுகிறார் “அட்டைப் பண்ணை எல்லாருக்கும் தருகிறோம் கவலைப்படாதீங்க” என்று. அதன் பிறகு கூறுகிறார் நீங்கள் ஒன்றரை ஏக்கரை பிடியுங்கள் அரை ஏக்கருக்கு காசு கட்டினால் போதும் என்கிறார். இது ஊழலை ஊக்குவிக்கின்ற ஒரு செயற்பாடாகவே பார்க்கிறேன்.

கடந்த காலங்களில் ட க்ளாஸ் தேவானந்தா மீனவர்களின் விருப்பங்களுக்கு மாறாக அட்டைப் பண்ணையை ஊக்குவித்ததால் இன்று பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்து இருக்கிறார்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனுக்கு நாம் ஒன்றை கூறுகிறோம், மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சீனாவின் நிகழ்ச்சி நிரல் நீங்கள் செயற்படுவீர்கள் ஆனால் உங்களுக்கு எதிராக மீனவ மக்களை ஒன்று திரட்டி போராட தயங்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் முதல்வர் அமரர் பொன். சிவபாலன் அவர்களின் 27வது ஆண்டு நினைவேந்தல்!



யாழ்ப்பாண - மாநகரசபையின் முன்னாள் முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் சட்டத்துறைச் செயலாளருமான அமரர் பொன். சிவபாலனின் 27ஆவது ஆண்டு நினைவு தினம் 11ம் திகதி வியாழக்கிழமையன்று நினைவுகூரப்பட்டது.

யாழ். மூளாயில் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் குடும்ப உறுப்பினர்கள் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.



1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ். மாநகரசபை நல்லூர் கல்யாண மண்டபத்தில் மாநகர போக்குவரத்து சம்பந்தமாக உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ் பொலிஸ் அத்தியடசகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ். நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ். மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப்பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி. மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டுபேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

பொன்.சிவபாலன் தமிழர் விடுதலைக் கூட்டணியினை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ். மாநகரசபையின் முதல்வராக பணியாற்றியதுடன் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI

## Pawn Brokers



30 வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "உங்களால் முடிந்தால் எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்" என்று சுமந்திரனுக்கு சுகாஷ் சவால்!

சுமந்திரனை நோக்கி சில கேள்விக்கணைகளை தொடுத்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், அவை தவறாக இருந்தால் தனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுமந்திரனுக்கு சவால் விடுத்துள்ளார்.

சுகாஷ் மக்களை தவறாக வழி நடத்துவதாக சுமந்திரன் தெரிவித்த நிலையிலேயே சுகாஷ் இவ்வாறு கேள்வி கணைகளை தொடுத்துள்ளார். அவர் கேள்வி எழுப்புகையில்,

1) நீங்கள் பின்கதவால் அரசியலுக்குள் பிரவேசித்த 2010களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பகிரங்க விவாதத்தில் "தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் தவறானது" என்று கூறி விடுதலைப் சூபோராட்டத்தையே காட்டிக் கொடுத்தது நானா? நீங்களா?

2) தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலைக்கு ஆதாரங்களில்லை என்று பச்சைப் பொய்யைக் கூறி இலங்கை அரசைக் காப்பாற்றியது நானா? நீங்களா?

3) தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலையை (Genocide) வெறும் "யுத்தக் குற்றங்கள்" (War crimes) என்று மலினப்படுத்தியது நானா? நீங்களா?

4) 2015 - 2019 மைத்திரி - ரணில் ஆட்சியில் அறிமுகப்படுத்த முற்பட்ட ஒற்றையாட் சிக்குட்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய யாப்பைச் சட்டம் தெரிந்த சட்டத்தரணியாக இருந்தும் வெட்கமே இல்லாமல் "சமஷ்டி" என்று பொய்யுரைத்தது நானா? நீங்களா?

5) முன்னாள் ஜனாதிபதிகள் சூரணிலோடும் ராஜபக்ஷாக்களோடும் மாறி மாறிக் கொஞ்சிக்குலாவி தமிழினத்தையே சிங்களத்திடம் அடகு வைத்தது நானா? நீங்களா?

6) சிங்கள பௌத்த பேரினவாத JVPயோடு சேர்ந்து மே தின ஊர்வலத்தில் பங்கேற்றுச் சிங்களக் கட்சிகளுக்குத் தமிழர் தாயகத்தில் அங்கீகாரம் கொடுத்தது நானா? நீங்களா?

7) தமிழினத்திற்கான தீர்வைப் பெறக்கூடிய பல சந்தர்ப்பங்களை அற்பச் சலுகைகளுக்காகச் சிங்களத்திடம் அடமானம் வைத்தது நானா? நீங்களா?

8) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணையைக் கோராது உள்ளக விசாரணையான "கலப்புப் பொறிமுறைக்கு" இணக்கம் தெரிவித்து ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் துரோகமிழைத்தது நானா? நீங்களா?

9) தமிழ் மக்கள் இராணுவப் பிரசன்னத்தை எதிர்த்துநிற்க STF பாதுகாப்பில் உலா வந்தது நானா? நீங்களா?

10) இராணுவத்துக்கு எதிராக ஹர்த்தால் என்று நாடகமாடிவிட்டு, உலகத்திலேயே முதல் தடவையாக காலையோடு ஹர்த்தாலை நிறைவுசெய்த அரசியல் வேடதாரி நானா? நீங்களா?

இப்படி உங்களின் அரசியல் துரோகங்களும் திருகுதாளங்களும் இன்னும் நிறையவே இருக்கின்றது. மக்களைத் தவறாக வழிநடாத்துபவனாக இருந்திருந்தால், நீங்களும் உங்கள் மகளும் ஒன்றாக இருந்த புகைப் படத்தைச் சிலர் தப்பாகச் சிருஷ்டிக்க முற்பட்டபோது, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து முதலாவது நபராக முன்வந்து பகிரங்கமாக அந்த விடயத்தைக் கண்டித்திருக்க மாட்டேன்.

இப்பொழுதும் கூறுகின்றேன், தமிழினத்தின் தற்போதைய கையறு நிலைக்கு நீங்களும் உங்கள் கட்சியுமே பிரதான காரணம். நான் ஏதேனும் தவறாக அல்லது பொய்யாக எழுதியதாகக் கருதினால், நீங்கள் தாராளமாக எனக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்தில் சந்திப்போம். தயவுசெய்து இனியாவது இனத்தைக் காட்டிக் கொடுத்து அரசியல் பிழைப்பு நடத்தாது திருந்தி வாழ முயற்சி செய்யுங்கள், அல்லது வரலாறு உங்களை மன்னிக்காது என தெரிவித்தார்.



# யாழ்ப்பாணம் குரும்பசிட்டியில் வாள்வெட்டு – குடும்பஸ்தர் படுகாயம்!

குரும்சிட்டி, தெல்லிப்பளை வைத்தியசாலை வீதியில் 11ம் திகதி வியாழக்கிழமை அன்று காலை பயங்கரவாதக் குழு ஒன்று குடும்பஸ்தர் மீது இந்த வாள்வெட்டு சம்பவத்தினை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பலாலி பொலிசார் தெரிவித்தனர்.



இந்த சம்பவத்தில், இரண்டு பிள்ளைகளின் தந்தையான தர்மராசா தினேஷ்குமார் (வயது 32) பலத்த வெட்டு காயங்களுக்கு உள்ளான நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பலாலி பொலிஸார் மற்றும் அச்சுவேலி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.




# வர்த்தலைவிளான்பதி விநாயகர் (கீர்த்தனை)

---

*பல்லவி*

*ஆறுமுகன் அண்ணனே ஆனை முகனே!*
*ஆறுதலைத் தந்தே அணைத்துக் கொள்வாயே!*

*அனுபல்லவி*

*குளக்கரை மருதின் கீழே குடியிருந்தே!*
*வளமாக வாழ வைக்கும் விநாயகனே!*

*சரணம்*

*பார்வதி மகனே பால கணேசா*
*சோர்வினைப் போக்கியே சாரீரம் தருவாயே!*
*பாடுகின்றேன் உன்னைப் பாராட்டி நாளுமே!*
*தேடுகின்றேன் உந்தன் திருவடி நாடியே!*

*ஆறுமுகன்.....*

*சரணம்*

*வர்த்தலை விளான்பதி வயற்கரை தன்னிலே!*
*நர்த்தனம் புரியும் நடராஜன் மைந்தனே!*
*அர்ப்பணம் செய்கின்றேன் ஆவியை உனக்கே!*
*சர்வேச நாயகனே சாந்தியைத் தருவாயே.!*

*ஆறுமுகன்.....*

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
***(416) 844-7453***

# Canada based 'Tamil Rights Group's Statement to the 60th Session of the United Nations Human Rights Council

# ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையினது 60வது கூட்டத்தொடருக்காக கனடாவைத் தளமாகக் கொண்ட "தமிழ் உரிமைகள் குழு" தயாரித்துள்ள அறிக்கை

ஜெனிவாவில் விரைவில் கூடவுள்ள ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையினது 60வது கூட்டத்தொடருக்காக கனடாவைத் தளமாகக் கொண்ட "தமிழ் உரிமைகள் குழு" தயாரித்துள்ள அறிக்கையில் அதன் தலைவர் கனடா வாழ் நவரத்தினம் ஸ்ரீநாராயணதாஸ் அவர்கள் கையெழுத்திட்டுள்ளார்.
மேற்படி அறிக்கையில் பல முக்கிய விடயங்கள் மேற்படி மனித உரிமைகள் பேரவையின் கவனத்திற்கு எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.
மேற்படி அறிக்கையில் "செம்ம என்பது வெறும் அட்டூழியத்தின் தளம் மட்டுமல்ல் அது இனப்படுகொலைக்கான ஒரு உயிருள்ள சான்று. ஆனாலும் அங்கு நீதிக்கான பாதை நிச்சயமற்றதாகவே உள்ளது. மனித உரிமைகள் கவுன்சில், அதன் தற்போதைய அணுகுமுறையில், உள்நாட்டு செயல்முறைகளை அதிகமாகச் சார்ந்திருப்பதன் காரணமாக மீண்டும் நீதி மறுக்கப்படும் வாய்ப்பு உள்ளதாகவே நாம் எண்ணுகின்றோம்." என்று அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
மேற்படி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மேன்மை தங்கியவர்களே,
இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காகவும், மிக அவசரமாக, இனப்படுகொலை குற்றத்திற்கு அங்கீகாரம் மற்றும் நீதி வழங்குவதற்காகவும் வாதிடும் ஒரு இலாப நோக்கற்ற, உலகளாவிய மனித உரிமைகள் அமைப்பான கனடாவைத் தளமாகக் கொண்ட தமிழ் உரிமைகள் குழு (**TRG**), மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத்தொடருக்கு முன்னதாக உங்களிடம் பல முக்கிய விடயங்களை எடுத்து வர தீர்மானித்துள்ளளது.

நாம் ஒரு முக்கியமான தருணத்தில் இந்த அறிக்கையை வெளியிடுகிறோம்.இலங்கையின் வடக்கு நகரமான யாழ்ப்பாணத்தில், செம்மணி பொதுமக்கள் புதைகுழிகளின் அகழ்வானது. தொடர்ந்து நடைபெற்று வருகிறது, இது செப்டம்பர் 6, 2025 நிலவரப்படி 2 ஆம் கட்டத்தை, 45 ஆம் நாளை எட்டியுள்ளது. இன்றுவரை, 240 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, 239 முழுமையாக தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. தோண்டியெடுக்கப்பட்ட ஒவ்வொரு உடலும் இலங்கை பல தசாப்தங்களாக மறைத்து வைத்திருந்த குற்றங்களை அப்பட்டமாக நினைவூட்டுகிறது. ஒவ்வொரு எலும்புக்கூடும் பதிலளிக்கப்படாத கேள்விகள், நிறைவேறாத நீதி மற்றும் இன்னும் மூடலைத் தேடும் குடும்பங்களின் எடையைக் கொண்டுள்ளது.

மன்னார் மற்றும் திருக்கேதீஸ்வரம் முதல் கொக்குதொடுவாய், மிருசுவில், களுவாஞ்சிகுடி மற்றும் பல தீவு முழுவதும் கண்டுபிடிக்கப்பட்ட டஜன் கணக்கான மனித புதைகுழிகளில் செம்மணியும் ஒன்று மட்டுமே. ஒவ்வொரு தளமும் ஒரே கதையைச் சொல்கிறது: முறையான படுகொலைகள், உடல்களை மறைத்தல் மற்றும் பல தசாப்தங்களாக அரசு மறுப்பு. இந்த புதைகுழிகள் தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் அல்ல, மாறாக தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு அழிப்பு பிரச்சாரத்தின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சான்றுகள்.

மேலும், செம்மணி வெறும் அட்டூழியத்தின் தளம் மட்டுமல்ல் அது இனப்படுகொலைக்கான ஒரு உயிருள்ள சான்று. ஆனாலும் நீதிக்கான பாதை நிச்சயமற்றதாகவே உள்ளது. மனித உரிமைகள் கவுன்சில், அதன் தற்போதைய அணுகுமுறையில், உள்நாட்டு செயல்முறைகளை அதிகமாகச் சார்ந்திருப்பதன் மீது மீண்டும் விழும் அபாயம் உள்ளது என்று நாங்கள் தீவிரமாகக் கவலைப்படுகிறோம். பல தசாப்தங்களாக தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுதல் மற்றும் பயனற்ற கமி'ன்கள் மற்றும் விசாரணைகளின் தொடர்ச்சியான சுழற்சிகளுக்குப் பிறகு, அத்தகைய நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றுவது மட்டுமல்லாமல் கவுன்சிலின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும். என்பதையும் நாம் எடுத்துச் சொல்ல விரும்புகின்றோம்.

இந்த தோல்வியுற்ற முயற்சிகளுக்கான எடுத்துக்காட்டுகளில் பின்வருவன அடங்கும்:
1991 மற்றும் 1993 காணாமல் போனோர் தொடர்பான கமி'ன்கள், இரண்டும் வரம்பில் வரையறுக்கப்பட்டவை மற்றும் இறுதி அறிக்கைகளை ஒருபோதும் வெளியிடாதவை 2006-2009 மனித உரிமை மீறல்கள் ஆணையம், சில வழக்குகளை விசாரித்து, நீதி வழங்கவில்லை, அறிக்கை வெளியிடாமல் கலைக்கப்பட்டது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையம் (2010-2011), சுதந்திரம் இல்லாததற்காகவும் சர்வதேச கண்டனத்தைப் பெற்றதற்காகவும் விமர்சிக்கப்பட்டது காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் பாரிய புதைகுழி விசாரணைகள் (2016–தொடர்ந்து), இவை பெரும்பாலும் பயனற்றவை மற்றும் எந்தவொரு வெற்றிகரமான வழக்குத் தொடரலுக்கும் வழிவகுக்கவில்லை.

உள்நாட்டு நடவடிக்கைகளின் ஆபத்து

இலங்கையின் உள்நாட்டு செயல்முறைகள் ஒருபோதும் உண்மை அல்லது பொறுப்புக்கூறலை வழங்கவில்லை என்பதை தமிழர்கள் வேதனையான அனுபவத்திலிருந்து அறிந்திருப்பதை சர்வதேச சமூகம் புறக்கணிக்க முடியாது. முதல் விசாரணை ஆணையங்கள் முதல் சமீபத்திய பணிக்குழுக்கள் வரை, ஒவ்வொரு பொறிமுறையும் அரசியல் தலையீடு, சுதந்திரமின்மை, சாட்சிகளை அச்சுறுத்துதல் மற்றும் நேரடி மறுப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

செம்மணி அல்லது பிற பாரிய அட்டூழியங்களை விசாரிக்க இலங்கைக்கு திறன் உள்ளது என்று கூறுவது ஒரு கற்பனையை நிலைநிறுத்துவதாகும். போர் முடிவடைந்ததிலிருந்து பதினாறு ஆண்டுகளுக்கும் மேலாக, உள்நாட்டு செயல்முறைகள் குற்றவாளிகளைப் பாதுகாத்துள்ளன, தவறான வாக்குறுதிகளை மறுபரிசீலனை செய்துள்ளன, மேலும் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் கலப்பின வழிமுறைகள் சட்டவிரோதமானவை, நம்பத்தகாதவை மற்றும் இனப்படுகொலையை நிவர்த்தி செய்ய அடிப்படையில் இயலாதவை என்று நாட்டில் உள்ள உயிர் பிழைத்தவர்கள், சிவில் சமூகம் மற்றும் தமிழ் மதத் தலைவர்கள் தெளிவாகவும் உறுதியாகவும் கூறியுள்ளனர்.

சர்வதேச பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல்

செம்மணியில் சமீபத்திய கண்டுபிடிப்புகள், கவுன்சில் தீர்க்கமாக செயல்பட வேண்டிய அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. மனித உரிமைகள் கவுன்சில் பொறுப்புக்கூறலில் தீவிரமாக இருந்தால், **OHCHR** இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் (**OSLAP**) ஆணை உடனடியாக வலுப்படுத்தப்பட வேண்டும்.

ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாமல், சர்வதேச சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரத் தேவையான மைய அங்கமான இனப்படுகொலை நோக்கத்தை நிரூபிக்கக்கூடிய விரிவான சட்டக் கோப்புகளைத் தயாரிப்பதற்கும் **OSLAP** அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். அத்தகைய ஆணை இல்லாமல், உலகளாவிய சமூகம் முக்கியமான ஆதாரங்கள் கலைந்து போகும் அபாயத்தையும், நீதிக்கான உயிர் பிழைத்தவர்களின் நம்பிக்கைகள் மேலும் மங்கிவிடும் அபாயத்தையும் கொண்டுள்ளது.

பல சர்வதேச பாதைகள்

இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் ஒரே பாதையில் இருக்க முடியாது. பின்வரும் சர்வதேச வழிகள் இணையாக முன்னேற வேண்டும்:

1 : சர்வதேச நீதிமன்றம் (**ICJ**): இனப்படுகொலைக்கான இலங்கையின் அரச பொறுப்பை தீர்மானிக்க உறுப்பு நாடுகள் நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும். இனப்படுகொலை மாநாட்டின் கீழ், இது விருப்பத்திற்குரியது அல்ல, ஆனால் அனைத்து மனிதகுலத்திற்கும் கடமைப்பட்ட ஒரு கடமையாகும்.

2: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (**ICC**): 2002 க்கு முந்தைய குற்றங்களுக்கான அதன் அதிகார வரம்புகளை அங்கீகரிக்கும் அதே வேளையில், 2002 க்கு பிந்தைய அட்டூழியங்களுக்கு **ICC**(அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம்) ஒரு அத்தியாவசிய மன்றமாக உள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் பரிந்துரை அல்லது இலங்கை ரோம் சட்டத்தில் இணைவது தொடரப்பட வேண்டும்.

3: சிறப்பு சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (**ICT**): செம்மணி, திருக்கேதீஸ்வரம் மற்றும் பிற வெகுஜன புதைகுழிகள் போன்ற 2002 க்கு முந்தைய குற்றங்களுக்கு, முந்தைய அட்டூழியங்கள் என்றென்றும் எட்டமுடியாத நிலையில் இருப்பதை உறுதிசெய்ய ஒரு பிரத்யேக தீர்ப்பாயம் நிறுவப்பட வேண்டும்.

4: சர்வதேச, பாரபட்சமற்ற மற்றும் சுயாதீன வழிமுறை **(IIIM/IIMM):** சிரியா மற்றும் மியான்மர் விடயத்தைப் போலவே: பூர்ஊர்சு மற்றும் கவுன்சிலிலிருந்து தனித்தனியாக ஒரு புதிய, முழுமையாக சுயாதீனமான வழிமுறை சேகரிக்க, பாதுகாக்க மற்றும் அவசியம்.

5: உலகளாவிய அதிகார வரம்பு: வரையறுக்கப்பட்டிருந்தாலும், உலகளாவிய அதிகார வரம்பின் கீழ் வழக்குத் தொடுப்புகள் ஒரு முக்கியமான நிரப்பு கருவியை வழங்குகின்றன. வெளிநாடுகளில் உள்ள உள்நாட்டு நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் பரந்த பொறுப்புக்கூறலுக்கான ஆரம்ப படிகளாகச் செயல்படும். இருப்பினும், இனப்படுகொலையை ஒரு சட்ட மற்றும் வரலாற்று உண்மையாக நிறுவுவதற்கான அதிகாரத்துடன் கூடிய ஐ.நா. ஆதரவுடன் கூடிய செயல்முறைக்கு இந்த முயற்சிகள் மாற்றாக இருக்க முடியாது.

எனவே தமிழ் உரிமைகள் குழுவானது பின்வருவனவற்றை வலியுறுத்துகிறது:

உள்நாட்டு மற்றும் கலப்பின வழிமுறைகளை முற்றிலுமாக நிராகரிக்கவும். அவை பல தசாப்தங்களாக தோல்வியடைந்துள்ளன, மேலும் தொடர்ந்து தோல்வியடையும்.

இனப்படுகொலை நோக்கத்தை நிரூபிக்கும் வழக்கு கோப்புகளை வெளிப்படையாக விசாரிக்கவும், இனப்படுகொலை நோக்கத்தை நிரூபிக்கும் வழக்கு கோப்புகளைத் தயாரிக்கவும் **OSLAP** இன் ஆணையை வலுப்படுத்தவும்.
இனப்படுகொலைக்கான இலங்கையின் அரசு பொறுப்பு குறித்த ஐஊது நடவடிக்கைகளுக்கான ஒரு வரைபடத்தை நிறுவவும்.

பூர்ஊர்சு இலிருந்து சுயாதீனமான, முழு தற்காலிக அதிகார வரம்பைக் கொண்ட ஒரு **IIIM/IIMM**-பாணி பொறிமுறையை உருவாக்கவும் அல்லது அதிகாரம் அளிக்கவும்.

செம்மணி உட்பட எந்த குற்றங்களும் சட்ட ஆய்வுக்கு வெளியே இருப்பதை உறுதிசெய்ய ஒரு சிறப்பு சர்வதேச தீர்ப்பாயம் அல்லது **ICC** (அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம்) பரிந்துரையைத் தொடரவும்.
முதன்மையான பாதைகளாக அல்லாமல், நிரப்பு பாதைகளாக உலகளாவிய அதிகார வரம்பு முயற்சிகளை ஆதரிக்கவும்.

மேன்மை தங்கியவர்களே, தங்கள் மனித உரிமைகள் சபையானது கவுன்சில் ஒரு குறுக்கு வழியில் நிற்கிறது. இலங்கையின் உள்நாட்டு நடவடிக்கைகளை மீண்டும் நம்பியிருப்பது செம்மணி மற்றும் எண்ணற்ற பிற இடங்களில் புதைக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களைக் கைவிடுவதாகும். உண்மையான அதிகாரம் கொண்ட சர்வதேச வழிமுறைகளுடன் தீர்க்கமாகச் செயல்படுவது, மனித உரிமைகள் கவுன்சில் நிலைநிறுத்த உருவாக்கப்பட்ட நீதியின் கொள்கைகளை உறுதிப்படுத்துவதாகும் என்பதை நாம் உறுதியாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.



இங்ஙனம்
உண்மையுள்ள,

நவரத்தினம் ஸ்ரீநாராயணதாஸ்
தலைவர்
தமிழ் உரிமைகள் குழு

# இவ்வார ராசிபலன்

**12-09-2025 வெள்ளி தொடக்கம் 18-09-2025 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**ரிஷபம்:** தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியாபாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L





**கடகம்:** அதிகாரமான பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O




**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரி க்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M





**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தனவரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகாகரிகும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W

(தொடர்ச்சி 22 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் [வரலாறும் மரபும்]

வரலாறும் மரபும் 1162

## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
## திருகோணமலை

*" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்- உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை. "*

செந்தமிழும், சிவநெறியும் செழித்தோங்கி மிளிரும் யாழ்ப்பாணம், தமிழீழ தாயகத்தின் பிரதான நிலப்பரப்பாக மிளிர்கின்றது. இந்நகரின் தென்கிழக்கே ஞானியரும், வேதியரும், பாவலரும் நாவலரும், போற்றிப் புகழ்ந்த நற்பதியாக கொழும்புத்துறை திகழ்கின்றது. இங்கு, எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமான் விக்னங்கள் தீர்த்து மக்களை ஆட்கொண்டு வருகின்றார். அருள்மிகு மன்றுளாடும் வதிரிபீட விநாயகர் ஆலயம், எங்கள் குருநாதன் தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு முன்பாகவும், நாவலர் பெருமான் நற்றமிழில் நயந்துரைத்த சைவ வித்தியாசாலைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. இவ்விநாயகப்பெருமானை அன்பர்கள் பக்தி மேலீட்டால் உளமுருகிப் பல்வேறு திருப்பெயர்களால் அழைத்து மகிழ்வர். "இலந்தை நகரில் இலங்கும் விநாயகனே" என்றும் "மன்றுளாடும் விநாயகப்பெருமான்" என்றும் பன்னெடுங்காலமாக வாழ்த்திப் பாமாலைகள் பாடியுள்ளனர்.

எமது காலத்திலே வாழ்ந்து மறைந்த சித்தர்களுள் தவத்திரு யோகர் சுவாமிகள் மிகமிக முக்கியமானவர். மாவிட்டபுரத்திலே 1872 ஆம் ஆண்டு உதித்த யோகர் சுவாமிகள், கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து இப்புனித பதியிலேயே தமது வாழ்நாளைக் கழித்தவர். வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் ஆலயத்திற்கு எதிரே யோகர்சுவாமிகளின் ஆச்சிரமம் அமைந்திருப்பதோடு, தவத்திரு யோகர் சுவாமிகள் இவ்வாலயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராகவும் விளங்கியுள்ளார்.

இக்கோவிலிலே சிவராத்திரி தினத்தைச் சிறப்பாக அனுட்டிப்பதற்கும், மாத சிவராத்திரி சிறப்பாக நடைபெறவும் யோகர் சுவாமிகள் பல வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் அருகாமையிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் புராண படனங்கள் நடைபெறவும், கந்தப்புராணத்தை படிக்குமாறும் யோகர் சுவாமிகள் சிவபதம் அடைவதற்குச் சில நாட்களுக்கு முன் ஆலய அர்ச்சகர்களுக்கு அறிவுரை வழங்கியதாக இவ்வாலயங்களோடு தொடர்புடையோர் கூறியுள்ளனர். இதனடிப்படையில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புத்துறை மக்களோடு, நல்லூர் ஆதீனத்திலிருந்து பலரும் வந்து கந்தப்புராண படன படிப்பினைச் சிறப்பாக நடத்தும் வழக்கம் காணப்பட்டது.


இவ்வாலயத்திலே நடைபெறும் விழாக்களுள் நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள், மேன்மையான இரவுகள் எனப் பொருள்படும். இறைவனை அன்னையாக வழிபடுவதே சக்தி வழிபாடு. மனிதவாழ்க்கைக்கு அடிப்படையான வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றினையும் அருளும் சக்தியை வணங்கி வழிபடும் திருநாளாக நவராத்திரி விளங்குகின்றது. அத்தோடு விரதமாகக் கடைப்பிடித்து, விழாவாகக் கொண்டாடப்படும் விழாக்களுள் நவராத்திரி விழா சிறப்புடையது. இந்துமதத்திலே கும்பம் வைத்தல் பொதுவானதாகக் காணப்பட்ட போதிலும், சிறப்பாக நவராத்திரிபூசையைக் கும்பபூசை என்று அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. மகிசம் என்ற அரக்ககுணத்தை அழித்து சாத்வீகத்தை அருளும் இவ்விழா இன்றைய காலப்பகுதிக்கும் மிகப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. சாத்வீகம் நிலைகுலைந்து அரக்ககுணம் மேலோங்கி மக்களை அழிக்கின்ற இந்நாளிலே, மகிசாசுர சங்காரம் போன்றவை உயிர்ப்புள்ள விழாவாகவே கொள்ள வேண்டும். மனித மனங்களிலே சாத்வீக எண்ணங்கள் நிலவி, மகிசத்தனமான எண்ணங்கள் மறைய உதவும் இத்திருநாள் காலத்தின் தேவையாக இன்றும் கொண்டாடப்படுகின்றது.

நவராத்திரி காலத்திலே நடைபெறும் வன்னி வாழை வெட்டு இவ்வாலயத்திலே மிகச் சிறப்பாக நடைபெறும் ஒரு நிகழ்வாகக் காணப்படுகின்றது. வன்னி வாழைவெட்டு என்ற ஆழமான கருத்தினைக்கொண்ட பதம் மறைந்து பலர் கன்னிவாழைவெட்டு என்றும் வழங்கி வருகின்றனர். அன்னை பராசக்தி துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி வடிவங்கொண்டு ஒன்பது நாட்களிலும் அருள்புரிந்த அன்னையானவள், அர்த்தநாரியாகி பரம்பொருளுடன் ஒன்றாக இணையும் வெற்றித்திருநாளிலே, இறைவன் குதிரைவாகனத்திலேறி, வன்னி மரத்தின் மீது அம்பெய்வதான ஒரு ஐதீகம் பண்டு தொட்டு நிலவுகின்றது. அத்தோடு அஞ்ஞாத வாசம் புரிந்த பாண்டவர்கள் தமது ஆயுதங்களை மறைத்து வைக்கும் இடமாக வன்னிமரப்பொந்துகளைப் பயன்படுத்தியுள்ளனர். அஞ்ஞாதவாசம் நிறைவுற்றுத் தமது ஆயுதங்களை வெளியே எடுத்து, ஆயுத பூசை செய்து வணங்கி, வெற்றித்திருநாளைக் கொண்டாடியதாகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாறான பல சம்பவங்களோடு தொடர்புகொண்ட வன்னி மரக்கிளையொன்றினை வாழைவெட்டு விழாவின்போது வாழையிலே செருகி, வன்னி வாழைவெட்டு நடைபெறுவது வழக்கம். நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமான கொலுவைத்தல் மனிதன் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி உயர் நிலையை அடைய வேண்டும் என்ற தார்ப்பரியத்தைக் குறிப்பதோடு, அழகுணர்வையும், பக்தியையும் உணர்த்துவதாக அமைகின்றது.

**வளரும்...**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் [வரலாறும் மரபும்]

வரலாறும் மரபும் 1163

## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
## திருகோணமலை

*" களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்குதவும் - அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவற்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன். "*

இத்தகைய சிறப்பு மிக்க நவராத்திரிவிழா மிகச் சிறப்பாக இவ்வாலயத்தில் கொண்டாடப்படுவது வழக்கம். நவராத்திரியில் ஓமகுண்டம் அமைத்து வேதியர்கள் மந்திரங்கள் ஓதி, பத்ததி வாசிக்கப்பெற்று, நவராத்திரி விழா பெருவிழாவாக வருடாவருடம் நிகழ்தும் பெருஞ்சிறப்புடைய ஆலயமாக, கொழும்புத்துறை மேற்கு, வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் விநாயகப் பெருமான் ஆலயம் திகழ்கின்றது.

இவ்வாலயத்தின் வரலாறு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் அரசர்களோடு தொடர்புடையதாகக் காணப்படகின்றது. இவ்வரசர்கள் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கியது என்பதற்கு ஈழத்திலுள்ள ஆலயங்கள் பலவும் சான்று பகருகின்றன. தற்காலத்திலே நடைபெறும் யுத்தத்தினால், ஈழத்தமிழர்களின் இதயமாக விளங்கும் ஆலயங்கள் பலவும் அழிக்கபட்டுள்ளது. இந்நிலையில் ஆலயங்களின் வரலாற்றைத் தெரிந்து தக்கவைத்துக்கொள்வது அனைவரதும் தலையாய கடமையாகும். இதன்மூலம் ஈழத்தமிழரின் சமகால வரலாற்றையும் பாதுகாக்க முடியும்.

விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி என்பவர் இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், நல்லூரிலே அரசாட்சி செய்துள்ளார். இவர் தென் மதுரையிலுள்ள திருமருங்கூர் என்ற கிராமத்திலிருந்து, கந்தஞ்செட்டி, கதிர்காமச்செட்டி, வேலுச்செட்டி என்போருடன் பல குடும்பங்களையும் அழைத்துவந்து, கொழும்புத்துறையிலே குடியமர்த்தினாரெனக் கர்ணபரம்பரையாக வழங்கப்படுகின்றது. இவர்களின் வழித்தோன்றல்களே இன்று கொழும்புத்துறையில் வாழும் பெருமக்கள் என்று நம்பப்படுகின்றது. அன்று வாழ்ந்த மக்கள் திருக்கோவில்களை அமைத்து, முறைப்படி மூலமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து, யந்திரம், மந்திரம், தந்திரம் என்பவற்றால் தாபித்து மக்கள் வழிபட்டு வணங்க வழிவகுத்தனர்.

இலங்கை அன்னியர்வசப்பட்டகாலப்பகுதியாகிய கி.பி 1623 ஆம் ஆண்டளவில் காணிகளின் தோம்பு அரசினரால் பதிவு செய்யப்பட்டது. கொழும்புத்துறை மேற்கில் அமைந்துள்ள மன்றுளாடும் வதிரிபீடவிநாயகர் ஆலயமும் இப்பதிவிலே இடம்பெற்றுள்ளது. வேதாரணியத்திலே அமைக்கப்பெற்ற திருமூலமூர்த்தி மன்றுளாடும் பெருமானாகிய நடராஜப்பெருமானைத் தந்தையாகவும், விநாயகமூர்த்திப் பிள்ளையாரைத் தனது பெயராகவும் பெற்றதால் "செட்டிவேதாரணியம் மன்றுளாடும் பெருமான் விநாயகமூர்த்திப் பிள்ளையார் கோவில்" என இவ்வாலயம் தோம்பிலே பதியப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திலே எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமானின் புராதன சுவடிகளை நோக்குமிடத்து, பல அற்புதமான தகவல்களைப் பெறக்கூடியதாக அமைந்துள்ளது. இற்றைக்கு முன்னூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர், நல்லூர் அரசகுமாரன் எதிர்மன்னசிங்கனை, போத்துக்கேய தளபதி பிலிப்டீஒலிவெரா என்பவன், இக்கோவிலில் வைத்தே சிரச்சேதம் செய்தானென்றும், இவ்வேளையிலே இக்கோவில் குருக்களும் வாளேந்திப் போரிட்டு அரசகுமாரனுடன் வீரமரணம் அடைந்தார் என்றும் கூறப்படும் செய்தி, சந்தர்ப்பம் வரும்போது ஒவ்வொருவருடைய அடிமனதிலும் உறங்கிக் கிடக்கும் உண்மையான உணர்வுகள் வெளிப்படும் என்பதை இச்செய்தி உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் இவ்வாலயம் முற்றாக அழிக்கப்பட்டது. அதன்பின்னர் இக்கோவில், தியாகரெத்தினமுதலியார் என்பவரது சிறுபுலம் என்னும் காணியில் வட்டவடிவமான குடிலாகப் புனரமைக்கப்பட்டது. இதன் பின் விநாயகப்பெருமானின் ஆலய பரிபாலனம் மூவர் அடங்கிய தர்மகர்த்தா சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. ஏறக்குறைய 125 வருடங்களுக்கு முன்னர் தில்லையம்பலம் குமாரசாமி (கணக்கர்) கந்தர் ஆறுமுகம் (சக்கிடுத்தார்) ஆரியர் தில்லைநாதர் (நொத்தாரிசு) என்போர் தர்மகர்த்தாக்களாகக் கடமையாற்றினர். இக்காலத்திலே கணக்கர் குமாரசாமி என்பவர் ஸ்ரீ தண்டாயுதபாணிகோவிலை இக்கோவிலுக்கு வடக்குப் புறத்தே அமைத்துள்ளார். அத்தோடு பல காணிகளையும் இக்கோவிலுக்குத் தர்மசாதனம் செய்துள்ளார்.

சக்கிடுத்தார் ஆறுமுகம் என்பவரும், இவரது மகளைத் திருமணம் செய்த சண்முகம் சுப்ரமணியம் என்பவரும், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பவற்றைக் கல்லால் கட்டியதோடு ஆலயத்தின் தூபியையும் செங்கல்லால் கட்டியுள்ளனர். இவ்வேளையிலே சுப்பையர் என அழைக்கப்பட்ட சுப்ரமணியம் என்பவர் தெற்குத் தெருவடிக் கிணற்றையும், மகாமண்டப மூடுபாதையையும் தனது சொந்தச் செலவிலே கட்டி முடித்தார்.

அக்காலத்திலே ஆலயத்திருப்பணிகளைச் செய்வதற்கு அனைத்து மக்களின் பங்களிப்பும் இடம்பெறவேண்டும் என்ற நல்லெண்ணம் பரவலாகக் காணப்பட்டுள்ளது. 1897 ஆம் ஆண்டு, மூவரடங்கிய தொண்டர் குழுவொன்று மக்களிடம் பிடியரிசி, தேங்காய், சேகரித்து அதன்மூலம் கோவிலுக்கு நிதிசேகரித்தனர். கோவிலில் மானம்பூத் திருவிழா கிரமமாகச் செய்யப்படவேண்டும் எனத் தீர்மானித்து குதிரை வாகனம் ஒன்றையும் செய்வித்தனர். சக்கிடுத்தார் ஆறுமுகம் என்பவர் நடராஜ விக்கிரகமொன்றைத் தாபித்து வைத்தார். நொத்தாரிசு தில்லைநாதரும், அவரின் சகோதரர்கள் மருமக்கள் ஆகியோரும் இணைந்து பல காணிகளையும், வயல்களையும் வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும்பெருமான் விநாயகமூர்த்தி கோவிலுக்குத் தர்மசாதனம் செய்துள்ளனர். நாவற்குழியிலும் சில காணிகள் இக்கோவிலுக்குத் தர்மசாதனமாக வழங்கப்பட்டுள்ளது.

**வளரும்...**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் இனப்படுகொலையின் 35 ஆண்டு நினைவேந்தல்

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு சத்துருக்கொண்டானன் இனப்படுகொலையின் 35வது ஆண்டு நினைவேந்தல் சத்துருக்கொண்டான் நாட்சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவு தூபியில் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சுடர் ஏற்றி மலர்தூவி இரண்டுநிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1990ம் ஆண்டு செட்டெம்பர் 9ம் திகதி சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி போன்ற பிரதேசங்களை இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல்படையினர் சுற்றிவளைத்து அங்கிருந்த குழந்தைகள் பெண்கள் உட்பட 186 பேரை போயிஸ் ரவுண் இராணுவமுகாம் பகுதிக்கு அழைத்து சென்று





அவர்களை வெட்டியும் துப்பாக்கியால் சட்டும் படுகொலை செய்து ரயர்கள் போட்டு எரித்தனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்வர்களின் நினைவேந்தல் நினைவு தூபியில் இடம்பெற்றது அதில் மட்டு மாநகரசபை முதல்வர் சிவம்பாக்கியநாதன், பிரதி முதல்வர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், முன்னாள் மாநகரசபை முதல்வர் ரி.சரவணபவன், மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் படுகொல செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுமக்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதனை தொடர்ந்து 4 கிராமங்களை சேர்ந்த 4 பேர் ஒன்றிணைந்து பொது சுடர் ஏற்றியதையடுத்து அங்கிருந்த அனைவரம் சுடர் ஏற்றி படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மசாந்திவேண்டி மலர்தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பினனர் படுகொலை செய்யப்பட்ட இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியை அகழ்வு பணி முன்னெடுக்குமாறும் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்தனர்.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A




**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாருதி (அனுமன்), அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கர்ம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெரும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்கள் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K


VILLA KARUNA
HOME FOR SENIORS
HELPING HANDS
Santhiyaragam
Golden Super Singer
சந்தியாராகம்
Santhiyaragam
GRAND FINALE
SEASON SEVEN
LIVE MUSIC BY
The WIND
Nothing but music !
SEPTEMBER 27, 2025
AT 4:30 PM
TICKETS
$60
THAMIL ISAI KALAAMANRAM OF ONTARIO
3-1120 TAPSCOTT RD, SCARBOROUGH, ON
TICKETS & MORE INFORMATION:
Inthu/Para: 416-282-4535 | Kiruba: 416-564-4366 | Indrani: 416-200-6971

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிதல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative

647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
# UTHAYAN உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U

- Airport
- Niagara Falls
- Ottawa
- Montreal
- Quebec City
- USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1536 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 12, 2025

## செம்மணியில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செம்மணியில் இராணுவத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பின் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசாமியின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. செம்மணி சந்திப் பகுதியில் வடக்கு - கிழக்கு நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் மைத்துனன் சந்திரகாந்தன் மயூரன் மற்றும் உறவினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



## கனடாவில் "இசைநிகழ்ச்சி" ஒன்றில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த பாடகர் ஸ்ரீநிவாஸிற்கு மதிய விருந்தளித்து கௌரவித்த மிசிசாகா சரவணாபவன் உணவக நிர்வாகிகள்



கனடாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பிரமாண்டமான இசை நிகழ்ச்சியில் பங்குபற்றவென வந்திருந்த பிரபல பாடகரும் சரிஹமபா பாடல் இசைப் போட்டி புகழ் பிரபல நடுவருமான ஸ்ரீநிவாஸ் அவர்ளை அழைத்து மதிய உணவளித்து மகிழ்ந்தார்கள் மிசிசாகாவில் அமைந்துள்ள சரவணாபவன் சைவ உணவகத்தின் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள்.

8ம் திகதி திங்கட்கிழமையன்று இந்த வரவேற்பு உபசாரம் இடம்பெற்றது.

சரவணாபவன் உணவக கனடா கிளைகளின் உரிமையாளர் கணேசன் சுகுமார் அவர்கள் மற்றும் முகாமையாளர் கணேஸ் ஆகியோர் இணைந்து பாடகர் ஸ்ரீநிவாஸ் அவர்களை அங்கு அழைத்திருந்தனர்.

இங்கே காணப்படும் படங்களில் மிசிசாகாவில் அமைந்துள்ள சரவணாபவன் சைவ உணவகத்தின் பணியாளர்கள் மற்றும் சமையல் வல்லுனர்கள் ஆகியோர் காணப்பெறுகின்றனர். (படம்: சத்தியன்)



## யாழ்ப்பாணத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பொன்னாலைக் கிராமத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவன்!

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சைக்கீ தோற்றி மாணவன் ஒருவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று பாடசாலை சமூகத்துக்கும், பெற்றோருக்கும், தனது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அரங்கநாதன் தத்வார்த்தன் என்ற மாணவனே இவ்வாறு 141 புள்ளிகளை பெற்றுள்ளார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

## செம்மணிக்கு செல்லாததும் கச்சதீவுக்கு சென்றதும் ஏன்?



*"யாழ்ப்பாணத்திற்கு குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாளே வந்து விட்ட ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி நின்ற போதும்,செம்மணியை வாகனத் தொடரணியாகக் கடந்து பயணித்த போதிலும்,செம்மணி மனித புதைகுழியை சென்று பார்வையிடவில்லை.செம்மணிப் பகுதியில் வாகனத்தை மெதுவாக செலுத்திக் கூட அப்பகுதியை பார்க்க அவர் விரும்பவில்லை"" - கே.பாலா*

--------------------------------

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த 1 ஆம் திகதி வடக்கிற்கு இரு நாள் விஜயம் செய்து பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தமை, கச்ச தீவுக்கு அதிரடி விஜயம் மேற்கொண்டமை எந்தளவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றிருந்ததோ அதற்கும் மேலாக ஜனாதிபதி செம்மணி மனிதப்புதைகுழி அகழ்விடத்திற்கு செல்லாது புறக்கணித்தமை தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



## தந்தை கொரோனாவால் உயிரிழந்த நிலையிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை புரிந்த மாணவிக்கு கௌரவிப்பு!

யாழ்ப்பாணம்- வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையில் கல்வி கற்று, புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 140 புள்ளிகளை பெற்று சாதனை புரிந்த ஜெயரஞ்சன் அஸ்வினிக்கான கௌரவிப்பு 11ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் நடைபெற்றது.

இதன்போது, புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் நிருசன் புஷ்பராஜா என்பவரால் இருபத்தையாயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டதுடன், புவனேஸ்வரன் யசிந்தாவின் நினைவாக மாணவிக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (தொடர்ச்சி 14ம் பக்கம்)